323

வ்யய ௵ ஆனி ௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 6

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

June, 1946
Vol. 5, No. 6

16 AUG 1946
MADRAS

ஸ்ரீ

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	122
2.	ஸ்ரீ குலசேகரப் பெருமாள் ராமாயணம்	126
3.	ஸ்ரீ தேசிகன்	133
4.	ஸ்ரீ தேசிகனும் கண்ணனும்	140
5.	செய்திகள்	143
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	144

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலையைப் பற்றிய

விளம்பரம்

ஸ்ரீ மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத தர்மபாடசாலையில் இவ்வர்ஷத்துக் கோடை விராம காலம் முடிந்த பிறகு, ஆனிமீ 16-ம் தேதியில் (30-6-46) மறு வருஷத்து ப்ரவசநத்திற்காகப் பாடங்கள் உபக்ரமிக்கப்படும். அப்பொழுது இந்தப் பாடசாலையில் புதிதாகச் சேர விரும்பும் வித்யார்த்திகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அப்படிச் சேர விரும்பும் வித்யார்த்திகள் இப்பொழுதே பாடசாலையின் அத்யக்ஷரான ஸ்ரீ உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார் எம். ஏ. எல். டி. ஸ்வாமியின் விலாஸத்திற்கு ஒரு மனுச் செய்துகொள்ளவேண்டும். பாடஶாலை ஆரம்பிக்கும் திநத்தன்று மத்யாஹ்நம் 12-மணிக்கு, ஸ்ரீ அத்யக்ஷ ஸ்வாமியும் மற்றை ப்ரவசந கர்த்தாக்களும் அந்த வித்யார்த்திகளைப் பரீக்ஷித்து, அந்தப் பரீக்ஷையில் த்ருப்திகரமாக ஸமாதாநம் சொல்பவர்களை அவரவர்களுக்குத் தகுந்த வகுப்பில் சேர்த்துக் கொள்வார்கள். அந்தப் பரீக்ஷைக்கு வித்யார்த்திகள் அவ்விடத்தில் அப்பொழுது ஸந்நிஹிதர்களாக இருப்பதுடன், அவர்கள் வேறு கலாசாலைகளில் பூர்வம் படித்தவர்களாக இருந்தால், அந்தக் கலாசாலையிலிருந்து விடுதலைப் பத்ரத்தையும் மற்றும் தமது யோக்யதா பத்ரம் ஏதாவது இருந்தால் அதையும் கொண்டுவந்து தாக்கல் செய்யவேண்டும். பால ஶிக்ஷை செய்யப்படும் வகுப்புக்களுள் கீழ் இரண்டு வகுப்புக்கள் நீங்கலாக, மற்றை ஶிரோமணி பர்யந்தமுள்ள எல்லா வகுப்புக்களுக்கும் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

ஸ்ரீ மதுராந்தகம்
8—6—46.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்,
மானேஜர்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்யய ௵ ஆனி ௴	ஸஞ்சிகை 6

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

—o—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—o—

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

இதென்ன கொடுங்கஷ்டம்!

"𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌂𑌗𑌕𑌂𑌚𑌕𑌮𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑌪𑌦𑌕𑌂𑌚 𑌕𑌂𑌪𑌯𑌨𑍍𑌤𑍀
𑌵𑌯𑌸𑌾𑌵𑍃𑌤𑌿𑌰𑌿𑌵𑌵𑌪𑍁𑌰𑍍𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌤𑌨𑍁𑌰𑍍𑌮𑍇 𑌵𑌿𑌕𑍍𑌷𑍇।
𑌸𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌹𑌮𑌜𑌨𑌾𑌮𑌰𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌶𑌂
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌹𑌨𑍍𑌤 𑌹𑌸𑌤𑍀𑌵 𑌜𑌰𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌤𑍍𑌰 ॥"

இந்த ச்லோகத்தின் அழகு அளவிட முடியாது. கஞ்சுகிகள் கழுத்தில் மாட்டியிருக்கும் சொக்காய் பாதம்வரையில் நீண்டு, தலை தவிர மற்ற உடம்பையெல்லாம் மூடிக்கொண்டிருக்கும். ஜரை என்னும் பெண், இவள் உடம்பு முழுவதும் வ்யாபித்திருக்கிறாள். தலையெல்லாம் பூர்ணமாய் நரைத்துவிட்டது. முகத்தில் மீசை தாடிகள் எல்லாம் வெள்ளை மயிரே. முதலில் ஒவ்வொரு மயிர் நரைக்கும்போது, அதைமட்டும் பிடுங்கி நரையாத வேஷம் போடலாம். இப்பொழுது அப்படியில்லை. முழுவதும் நன்றாய் வெளுத்துவிட்டது. உடம்பில் எல்லா இடங்களிலும் வெள்ளை மயிரே மூடியுள்ளது. சொக்காயும் உடம்பும் நடுங்கி ஆடும்போது, அதுவும் வெளியே காணப்படுகிறது. ஜரை தேஹம் முழுவதும் உள்ளே புகுந்து, உடம்பின் ஒவ்வொரு அங்கத்திலும் ஓயாத ஆட்டத்தை உண்டு பண்ணுகிறது. கஞ்சுகத்தின் உள்ளேயுள்ள அங்கங்களெல்லாம் ஆட்டிவைக்கப்படுகையில், அந்த அங்கங்களோடு ஸம்பந்தித்த சொக்காயும் ஆடுகிறது. தள்ளாத கிழவனாகிய எனக்கு நடப்பதற்கே சக்தியில்லை; தவிர, நர்த்தநம் செய்வதென்பது கனவிலும் நினைக்கக்கூடாத கார்யம்; ஆயினும், என்னுடைய எல்லா அங்கங்களும், மேல் சொக்காயுடன் சேர்ந்து, 'கடகட' வென்று வேகமாய் ஜரையினால் ஆட்டிவைக்கப்படுகின்றன. இக்கிழவனுடைய சொக்காயும் எல்லா அங்கங்களும் சேர்ந்து ஓய்வில்லாமல் இப்படிக் 'கடகட' வென்று நர்த்தநம் செய்விக்கப்படுகிறது. என் தேஹபிண்டம் ஒருநாளாவது பிறர்க்கு அடிமைப்படாமல் என் ஸ்வாதீநமாயிருக்கவில்லை. இத்தனை வயதாகியும் என் அடிமைச் சீட்டு கிழிக்கப்படாமலே, இன்னும் அரசனுக்கு அடிமையாய் அவனுக்குப் பரதந்த்ரமாகவே இருந்துவருகிறது. பரமாத்மா வென்னும் பரனுக்குப் பரதந்த்ரமாக நான் எக்காலமும் என் உடம்பை நிவேதநம் செய்யவில்லை. என் உடம்பு பிறர்க்கே ஆட்பட்டுள்ளது. ஒரு நாள் ஊழியத்தை விட்டு நீங்கிப் பிண்டத்தை ஸ்வாதீநப்படுத்திக் கொள்ளும் பாக்யமே எனக்கில்லை. அது பிறர்க்கே உழைப்பதாகச் சென்று வருகிறது. உடம்பும் அங்கங்களும்

இப்படி க்ஷீண சக்தி யடைந்திருக்கச் செய்தேயும், ராகம் (ஆசை) மட்டும் துளிகூட வற்றவில்லை. 'த்ருஷ்ணைகா தருணாயதே' என்பர். ராகக் கடல் அசோஷ்யம். இன்னும் பஹுகாலம் ஜீவித்திருக்க வேணுமென்ற ஆசைக்கு ஜரையு மில்லை; மரண மென்னும் ஓய்வு மில்லை. அஜரனும் அமரனுமாக ஜீவித்திருக்கவேண்டு மென்ற ஆசை வளர்ந்துகொண்டே வருகிறது. இப்படியிருக்கும் பேதையாகிய என்னைப் பார்த்து, என் அந்தராத்மாவே உள்ளேயிருந்து குலுங்கக் குலுங்கச் சிரிப்பதுபோலும், மயிர்க்கால்தோறும் ஓடும் வெள்ள மயமான ஹாஸம்போலும் காண்கிறது. "ராமனைத் தர்சநம் செய்யும் பாக்ய மில்லாமலும், ராமன் தன்னைக் கடாக்ஷிக்கவும் பாக்ய மில்லாமலும் இருப்பவன், உலகத்தோர் எல்லாராலும் நிந்திக்கப்படுபவ னுவான். அதுமட்டு மல்ல; அவனுடைய ஆத்மாவும் அவனை மிகவும் நிந்திக்கும்" என்பது மஹர்ஷி வார்த்தை. நானும் அதுபோன்ற பாபி. தன்னிடத்தில் எல்லோருக்கும் பஹுமானமே இருக்கும். தன்னைப் பார்த்துத் தானே சிரித்துக்கொள்பவர் அபூர்வர். 'ஹஸதீவ' [சிரிப்பதுபோல் இருக்கிறது.] நானுகை மனமார, வேணுமென்று சிரிப்பதல்ல. என் ஜரையினுல் ஏற்பட்ட கம்பம் (ஆட்டம்) இப்படி என்னைப் பார்த்துக் குலுங்கக் குலுங்கச் சிரிப்பதுபோல் ஆட்டிவைக்கிறது; நர்த்தநம் செய்விக்கிறது. நான் ஸ்வயமாக இந்த ஆத்ம பரிஹஸந பாவத்தோடு குலுங்கக் குலுங்க நகைப்பதாக நினையாதீர்கள். 'இப்படி நான் என்னையே குலுங்கக் குலுங்க நகைப்பதுபோல் ஆட்டி வைக்கப்படுகிறேன்' என்று 'இவ' சப்தத்தால் காட்டும் ரஸம் அநுபாவ்யம். இத்தனை கிழவனுடைய ஒவ்வொரு அங்கமும் ஏககாலத்தில் என்ன வேகமாய் ஆடிக் குலுங்கி நர்த்தநம் செய்கிறது! ஒரு நிமிஷம்கூட இந்த நர்த்தநம் ஓய்வதில்லை. ஒரு நர்த்த யுவதிக்கும், இத்தனை வேகமாய் ஓயாமல் குலுங்க நர்த்தநம் ஸித்திக்காது. யுவதி நர்த்தகிகள் ஆடுகையில், அவர்கள் ஸ்தநங்களும் கஞ்சுகமும் (ரவிக்கை) சேர்ந்து குலுங்கிக் குலுங்கி நர்த்திக்கும். அதுபோல் இந்த வ்ருத்த கஞ்சுகியின் எல்லா அங்கங்களும், அவற்றின்பேரில் உள்ள கஞ்சுகத்தோடு குலுங்கி நர்த்திப்பதென்று ரஸம். இது 'வரிணதிஜரதங்குகே' என்பதால் ஸூசிப்பிக்கப்படுகின்றது. உடம்பு இப்படி ஆடுகையில், தலையாட்டத்திற்குக் கேட்பானேன்?

[பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆலோசித்து] இந்த அதிகாரத்தை விட்டால்தான் ஸுகத்தில் அதிகாரமிருக்கும். [அதிகாரம் என்பதற்கு உத்யோகம், பலத்தை அநுபவிக்கும் ஸ்வாம்யம், என்று இரு பொருள்கள் உண்டு. உத்யோகம் என்னும் அதிகாரத்தைக் கைப்பற்றிய வரையில் ஸுகத்தில் ஸ்வாம்யமே; போக்த்ருத்வமே கிடையாது; உத்யோக அதிகாரத்தை விட்டால் ஸுகத்தில் அதிகாரம் உடனே கிடைக்கும். இல்லையேல் இல்லை.] இதென்ன வைராக்யப் பேச்சு? வைராக்ய நினைப்பு? மஹாமோஹனுக்கு அடிமைப்பட்டவனுக்கு வைராக்யம் பேசஇடமுண்டோ? இவர் ஆஜ்ஞை ஸுக்ரீவாஜ்ஞை. ப்ரஸாஜ்ஞைதான் சிக்ஷை. வெகுநாளாய் அவன்கார்யத்தை ஸாதிக்க வேணும். துளித் தவறினுல் தலை போய்விடும். என் யஜமானர் விவேக ராஜ்யத்திலெல்லாம் கலியைப்புகவிட்டுப் பசுபக்ஷி முதல் இந்த்ரன் வரையில் எல்லோரிடத்

திலும் புகுந்து ஸஞ்சரிக்கவல்ல 'விஷ்நு' என்னும் சாரனை அனுப்பி எதிரிகள் நிலையை அறிந்து வரும்படி சொல்லியிருக்கிறார். என் யஜமாநன் மநஸ்ஸிலேயே இப்போது ஆட்டம் ஏற்பட்டிருக்கிறது. விக்நன் என்னும் அந்தச் சாரன் என்ன உளவு அறிந்திருக்கிறானென்று அறியும்படி என்னைக் கட்டளையிட்டிருக்கிறார். விக்நன் என்னும் சாரன், விவேக மஹாராஜன் தேவயாநத்தில் செல்வதையும், யமம், நியமம், ஆஸநம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், என்னும் ஐந்து யோகாங்கங்களைப் புருஷனுக்கு அப்யஸித்துவைத்து, இப்பொழுது ஸம்யமமென்று சொல்லப்படும் மேல் மூன்று அங்கங்களையும் பயிற்சி செய்விக்கும் ஸம்ரம்பத்தில் வ்யாப்ருதராயிருப்பதையும் கண்டுகொண்டு, அந்த ஸமாசாரத்தை மஹாமோஹரிடம் தெரியப்படுத்த அந்த:புரத்துக்கு அருகில் காத்து நிற்கிறான். இந்தச் சாரன், தான் கண்டதை உண்மையாக உரைப்பவன். அவன் சொன்னபடிக்கே இதோ இங்கே விவேகர், தர்க்கன் என்னும் ஸாரதி ஆகாய விமாநத்தை ஓட்ட, அவனோடுகூட ஆகாய விமாநத்தில் வருகிறார்.

"மநோரதமயாரூடோ விவேகஸ்தர்க்கஸாரதி: ।
திதிக்ஷு: ஸம்யமஸ்தாநம் தபஸாமந்விஷ்யதே ॥"

[மநோரத மென்னும் ரதத்தில் ஏறிக்கொண்டு விவேகர், தர்க்கனென்னும் ஸாரதியோடுகூட ஸம்யம மென்னும் தாரணா த்யாந ஸமாதிகளைப் புருஷன் அப்யஸிப்பதற்குத் தக்க தபோயோக்ய ஸ்தாநத்தைத் தேட ஆகாய மார்க்கத்தில் வந்து கொண்டிருக்கிறார்.]

'த்ரயமேகத்ர ஸம்யம:' என்பது யோக ஸூத்ரம். யோகத்தின் 6 முதல் 8 வரையில் உள்ள மூன்று அங்கங்களுக்கும் சேர்ந்து ஸம்யம மென்று பெயர். புருஷனுக்கு முதல் ஐந்து அங்கங்களின் அப்யாஸம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது பகவானை ஏகாக்ரமாக ஸஜாதீய ப்ரத்யய ப்ரவாஹ ஸந்தாநமாக விஜாதீய ப்ரத்யயம் கலப்பதென்னும் விக்ந மில்லாமல் த்யாநம் செய்து, அந்த த்யாநம் ஸம்யக் ஜ்ஞாத ஸமாதி என்னும் தசையை அடையவேணும்.

"விக்நாயந்தே ந கோவிந்தே ந்ருணாம் பக்திர்விவர்த்ததே ।
ஸம்ஸாரந்யூநதாபீதா: த்ரிதசா: பரிபந்திந: ॥"

என்பர். பக்தி யோகம் வளர்வதற்கு எத்தனை விக்நங்கள் நேரும்? தேவர்களே, எங்கே ஸம்ஸார விபூதி குறைந்து தங்களைப் பூஜிப்பவர் தொகை குறையுமோ வென்று பயந்து விக்நம் செய்வர். விவேகருக்குத் தர்க்கர் ஸாரதியாகிறார். "வேத சாஸ்த்ரத்துக்கு அவிரோதியான ஸத்தர்க்கத்தைக் கொண்டு, வேதாந்த பக்ஷத்திற்கு உபபத்திகளைக் கண்டுகொண்டு, அதில் த்ருட ப்ரதிஷ்டையை ஸம்பாதிக்கவேணும். ப்ரத்யாஹாரம் வரையிலுள்ள ஐந்து யோகங்களின் பயிற்சியால் எல்லா இந்த்ரியங்களையும் வசப்படுத்தி யாயிற்று. இப்பொழுது தாரணை முதலிய மேலங்கங்களாகிய ஸம்யம மென்னும் தபஸ் ஸித்திப்பதற்கு, யோக்யமான ஸ்தாநத்தைத் தேட ஆகாய மார்க்கத்தில் புவந ஸஞ்சாரம் செய்கிறோம்" என்று விவேகர் அடுத்தபடி பேசப்போகிறார்.

[விவேகரும் தர்க்கரும் ஆகாசவிமாநத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு ப்ரவேசிக்கிறுர்கள்].

விவேகர்:—"தர்க்கன் என்னும் ஸாரதியே! உன்னுடைய ஸஹாயத்தைக் கொண்டு மனம் என்னும் என் ரதம் நல்ல மார்க்கத்தில் செல்லுகிறது. [தர்க்கம் என்பதின் ஸ்வரூபத்தைச் சுருக்கமாக எதிரிக்கு அநிஷ்டப்ரஸஞ்ஜநம் செய்வதன் மூலமாய், அவனுடைய இஷ்டத்திற்கு நேர் விரோதத்தில் கட்டாயம் முடிவதாயு முள்ளதென்று வர்ணிக்கிருர். தர்க்கம் என்பதில் அநுமாநத்தில் அநுகூலமாயிருப்பது. நான் சொல்லுகிறபடி நீ ஒப்பாவிடில் உனக்கு அநிஷ்டம் நிச்சயமாய் வரும்படி நான் ஒரு ப்ரஸஞ்ஜநம் செய்வேன். அது உன்னைக் கட்டுப்படுத்திவிடும். புகை யிருக்கும் காரணத்திரைல் நெருப்பு இருந்தே தீரவேண்டு மென்று அநுமாநம் செய்வர். 'புகை யிருக்கட்டும்; நெருப்பு இல்லாமற்போனு லென்ன?' என்று எதிரி கேட்டால், 'நெருப்பு இல்லாமற்போனல் புகையும் இல்லாமற் போகவேண்டும்' என்று நாம் பதில் சொல்வதைத் தர்க்கம் என்பர். புகை யிருக்கு மிடமெல்லாம் நெருப்பும் கூடவே யிருந்தே தீரவேணும். 'நெருப்பும் கூட இல்லாமல் புகை இருக்கவே யிருக்காது' என்கிற வ்யாப்தியை எதிரி தட்டமுடியாமல் இருக்கச் செய்யவேணும். நெருப்பே இல்லாமல் புகைமட்டும் தனியே இருக்கும் ஓரிடத்தை எதிரி காட்ட முடியாததால், நாம் கொடுக்கும் ஆபாதநம் அவனைக் கட்டுப்படுத்தித் தீரும். இப்படிச் செய்யும் ப்ரஸஞ்ஜந மாகிய தர்க்கத்திற்கு ஐந்து அங்கங்கள் கூடியிருக்கவேணும். அவை:—1. ப்ரஸஞ்ஜக ப்ரஸஞ்ஜநீய வ்யாப்தி [நெருப்பினல் புகை வ்யாபிக்கப்பட் டிருக்கவேணும். அதாவது: புகை யிருக்கு மிடமெல்லாம் நெருப்பு இருந்தே தீரவேணும். (2) ப்ரதிதர்க்கா ப்ரதிகாதம் [இதைப்போல் எதிரியையும் திருப்பி ஒரு ப்ரதி தர்க்கத்தை ப்ரயோகிக்க இட மிருக்கக்கூடாது.] (3) ப்ரஸஞ்ஜநீய விபர்யய பர்யவஸாநம் (4) ப்ரஸஞ்ஜநீயா நிஷ்டத்வம் [நெருப்பு இல்லாவிடில் புகையு மிராதென்று நாம் ப்ரஸஞ்ஜநம் செய்கையில், நீ கொடுக்கும் ஆபத்தி எனக்கு இஷ்டமென்று எதிரி சொல்ல வழியில்லாமல், நம்முடைய ஆபத்தி அவனுக்கு அநிஷ்டமாகவே இருக்கவேணும்.] (5) பரபக்ஷாஸாதகத்வம் [நாம் கொடுக்கும் ஆபத்தி எதிரிக்கு அநுகூலமாகிவிடக் கூடாது.] இப்படி ஐந்து அங்கங்களோடு கூடிய தர்க்கம் அநுமாநத்தை ஸாதிப்பதற்கு அநுகூலமாக ஒத்தாசை செய்யும்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீரங்கராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ குலசேகரப் பெருமாள் ராமாயணம்

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை, 1, பக்கம் 10-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஒரகடம் கோ. ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை]

6. தனமருவு வைதேகி பிரிய லுற்றுத்
தளர்வெய்திச் சடாயுவைவை குந்தத் தேற்றி
வனமருவு கவியரசன் காதல் கொண்டு
வாலியைக்கொன் றிலங்கைநக ரரக்கர் கோமான்
சினமடங்க மாருதியாற் சுடுவித் தானைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
இனிதமர்ந்த வம்மானை யிராமன் தன்னை
ஏத்துவா ரிணையடியே யேத்தி னேனே.

[இப்பாட்டால் ஸீதா வியோகம், ஜடாயு மரணம், ஸுக்ரீவ ஸக்யம், வாலி வதம், லங்கா தஹநம்—இவை சொல்லப்படுகின்றன.]

[பதவுரை] தனம் மருவு - (தான் விரும்பும்) செல்வமாகப் பொருந்திய, வைதேகி பிரியல் உற்று - ஸீதாபிராட்டி பிரியப்பெற்று, தளர்வு எய்தி - (அதனால்) வருத்த மடைந்து, சடாயுவை - சடாயு வென்னும் கழுகரசனை, வைகுந்தத்து ஏற்றி - பரமபதத்தில் செலுத்தி, வனம் மருவு - (வாலிக்கு அஞ்சிக்) காட்டில் மறைந்து வஸிக்கிற, கவி அரசன் - வானர ராஜனான ஸுக்ரீவனுடன், காதல் கொண்டு - ஸ்நேகம் செய்துகொண்டு, வாலியை கொன்று - (அவன் விருப்பத்தின்படி அவன் தமையனான) வாலியை வதைத்து, இலங்கை நகர் - இலங்கா புரியை, அரக்கர் கோமான் - (அதற்குத் தலைவனான) ராக்ஷஸ ராஜனான இராவணனுடைய, சினம் அடங்க - செருக்கு அடங்கும்படி, மாருதியால் - அனுமானைக்கொண்டு, சுடுவித்தானை - எரிப்பித்தவனும், தில்லைநகர் திருச்சித்ர கூடந் தன்னுள் - தில்லைத் திருச்சித்திர கூடத்திலே, இனிது அமர்ந்த - இனிமையாக எழுந்தருளியிருக்கிற, அம்மானை - ஸர்வ ஸ்வாமியுமான, இராமன் தன்னை - ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனை, ஏத்துவார் - துதிக்கின்ற அடியார்களுடைய, இணை அடியே - உபய பாதங்களையே, ஏத்தினேன் - ஸ்தோத்ரம் பண்ணப் பெற்றேன்.

[கருத்து] ஸீதையைப் பிரிந்து, அதனால் மிகுந்த மனத் தளர்ச்சியடைந்து, ஜடாயு வென்னும் கழுகரசற்கு மோக்ஷம் தந்து, ஸுக்ரீவ மஹாராஜனிடம் நட்புக்கொண்டு, அவன் தமையனான வாலியை வதைத்து, ஹநுமானைக் கொண்டு லங்கா நகரத்தை எரியூட்டுவித்து, தில்லைத் திருச்சித்திரகூடத்தில்

எழுந்தருளியிருக்கும் ஸர்வ ஸ்வாமியான ஸ்ரீ ராமபிரானை எப்போதும் துதிக்கின்ற பாகவதர்களுடைய திருவடிகளையே வணங்கப்பெற்றேன்.

[விசேட உரை] ராம லக்ஷ்மணர் இராது ஸீதை தனித்து நின்ற ஸமயம் பார்த்து ராவணன் அவளைத் தேரின்மேல் வைத்துச் செல்லும்போது, அவள் கதறிக் கூக்குர லிட்டதைக் கேட்டுக் கழுகரசனான ஜடாயு ஓடிவந்து எதிர்த்துப் பெரும்போர் செய்து, அவனது முடி கொடி முதலியவற்றைச் சிதைக்க, முடிவில் ராவணன் தன் தெய்வ வாளினால் கழுகரசனது சிறகுகளை அறுத்துத் தள்ள, அவன் குற்றுயிராய் நிலத்தில் வீழ்ந்துபட்டான். ராம லக்ஷ்மணர் மாரீசனை முடித்து மீண்டும் பர்ணசாலைக்கு வந்து பார்க்க, ஸீதையைக் காணாது கலங்கி அவளைத் தேடிக்கொண்டு வருகையில், வழியில் உயிர்நீங்கும் நிலையில் தளர்ச்சி யுற்று விழுந்து கிடந்த ஜடாயு, நடந்த செய்தியை அவர்களிடம் சிறிது கூறி உயிர் நீப்ப, ஸ்ரீ ராமபிரான் அவரை ஸம்ஸ்கரித்து அவருக்குப் பரமபதம் அளித்தனன் என்பதும்;

ராம லக்ஷ்மணர் ஸீதையைத் தேடிக்கொண்டு செல்லுகையில், ஹநுமான் மூலமாக ஸுக்ரீவனோடு நட்புக் கொண்டு, அவன் வேண்டுகோளின்படி அவன் தமையனான வாலியைக் கொன்று ஸுக்ரீவனுக்கு முடிசூட்டினன் என்பதும்;

ஸீதையைத் தேடும்பொருட்டு ஸுக்ரீவனால் அனுப்பப்பட்ட ஹநுமான் லங்கா நகரத்தில் அசோக வனிகையில் பிராட்டியைக் கண்டு தான் ராமதூதன் என்பதை நிரூபித்து, லங்கையில் தன்னை எதிர்த்து வந்த அக்ஷகுமாரன் முதலிய அரக்கர்களைக் கொன்று, முடிவில் இந்த்ரஜித்தினால் ப்ரம்ஹாஸ்த்ரத்தால் கட்டுண்டு ராவணன் முன்னிலையில் சேர, அவன் ஹநுமானைக் கொல்லும்படி கட்டளையிட, விபீஷணன் ‘தூதரைக் கொல்லலாகாது’ என்ற நீதியைக் கூறித் தடுக்க, ராவணன் ஏவலால் அரக்கர்கள் ஹநுமானுடைய வாலில் துணியைச் சுற்றி எண்ணெயிட்டுத் தீ வைக்க, ஹநுமான் அதனால் லங்காநகரை எரித்திட்டனன் என்பதும் இச்செய்யுளில் காணப்படும் கதை.

தனம் மருவு வைதேகி — தனம் என்பதை ‘ஸ்தநம்’ என்னும் சொல்லின் சிதைவாகக் கொள்ளின், திருமுலைத் தடத்தின் அழகாலும் ஆபிஜாத்யத்தாலும் மேம்பட்டவள் என்று பொருள்படும். ‘யநம்’ என்றும் திரிபாகக் கொள்ளின் ‘விஷ்ணுஸ்ரீ’ என்று பெருமாள் விரும்பும் செல்வமாகப் பொருந்திய ஸீதாபிராட்டி என்று பொருள்படும்.

ஜடாயு—ஜடா ஆயு என்று பதம் பிரித்து, ஜடைபோல் மிகுந்த திரண்ட ஆயுளுடையவன் என்றும், சிறகில் உயிரை உடையவன் என்றும் பொருள் கூறுவர் வடமொழி வல்லார். இவர் ஸூர்ய ஸாரதியான அருணனுடைய புத்ரர்; ஸம்பாதியின் தம்பி; தசரத சக்ரவர்த்திக்கு உயிர்த் தோழர். தண்ட

காரண்யத்தில் ஸந்தித்த ராம லக்ஷ்மணர்களைத் தமது புத்ரர்போலப் பாவித்து வந்தவர்.

வாலியின் கொடுமைக்கு அஞ்சி, அவன் வரத்தகாத மதங்காச்சிரமத்தில் மறைந்திருந்தா னாதலின், ஸுக்ரீவ மஹாராஜன், ‘ வனமருவு கவியரசன்’ எனப்பட்டான்.

வாலி என்னும் சொல், வாலில் வலிமை உடையவன் என்றும், வாலினின்றும் பிறந்தவ னென்றும் பொருள்படும். இவன் இந்த்ர புத்ரன்; ஸுக்ரீவனது தமையன்; கிஷ்கிந்தாதிபதி; தன்னிடம் போர்புரிய வந்தவரது வலிமையில் பாதி தன்னிடம்வந்து சேரும்படி வரம் பெற்றவன்; ராவணனிடம் அக்நி ஸாக்ஷியாக நட்புக்கொண்டவன். இதனால், இவனை உதவியாகக் கொண்டால் ராவணாதி ராக்ஷஸர்களை அழிக்க வழி யில்லாமற் போகு மென்று நினைத்து, ராமபிரான் தன்னைச் சரண மடைந்த ஸுக்ரீவனோடு நட்புக்கொண்டு அவன் வேண்டுகோளின்படி வாலியை வதைத்திட்டான்.

மாருதி—வாயுவின் குமாரன்; ராமபிரானின் உத்தம தூதன்; இவன் லங்கா தஹநம் செய்தது ராமபிரான் திருவுள்ளத்துக்குப் பாங்காக இருந்த தென்பது ‘சினமடங்க மாருதியாற் சுடுவித்தானை’ எனும் சொற்றொடரில் தோன்றும்.

7. குரைகடலை யடலம்பால் மறுக வெய்து
குலைகட்டி மறுகரையை யதனா லேறி
எரிநெடுவே லரக்கரோடு மிலங்கை வேந்தன்
இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசு மீந்து
திருமகளோ டினிதமர்ந்த செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அரசமர்ந்தா னடிசூடு மரசை யல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசு தானே.

[இப்பாட்டால் ஸேது பந்தநம், ராவண வதம், விபீஷண பட்டாபிஷேகம், ஸீதா ஸமாகமம்—இவை சொல்லப்படுகின்றன]

[பதவுரை] குரை கடலை—சப்திக்கின்ற ஸமுத்ரத்தை, அடல் அம்பால்—வலிமையுடைய அம்பைக்கொண்டு, மறுக எய்து—கலங்கும்படி எய்யத் தொடங்கி, குலை கட்டி-(அதில்) அணை கட்டி, அதனால்-அந்த அணை வழியாக, மறு கரையை ஏறி—(கடல் கடந்து) அக்கரை சேர்ந்து, எரி நெடு வேல்—(பகைவர்களை) எரிக்கவல்ல நீண்ட வேலையுடைய, அரக்கரொடும்—ராக்ஷஸர்களுடைய உயிருடனே, இலங்கை வேந்தன்—லங்காதிபதியான ராவணனுடைய, இன் உயிர் கொண்டு—இனிய உயிரையும் வாங்கி, அவன் தம்பிக்கு—அவ்விராவணன் தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு; அசுரம் ஈந்து—ரஜ்யத்தையும் கொடுத்து, திருமகளோடு—லக்ஷ்மியின் அவதாரமான ஸீதையுடனே, இனிது அமர்ந்த-(பிரிவெல்லாம் மறக்கும்படி) இனிதாக அமர்ந்தருளிய, செல்வன் தன்னை-ஸர்வ

ஐச்வர்யங்களை யுடையவனும், தில்லைநகர் திருச்சித்ர கூடம் தன்னுள்—தில்லைத் திருச்சித்ரகூடத்தில், அரசு அமர்ந்தான்–(தனது மேன்மை தோன்ற) வீற்றிருக்கின்றவனுமான ராமபிரானது, அடி சூடும்–திருவடிகளைத் தலைமேற் கொள்ளுதலாகிற, அரசை அல்லால்—அரசாட்சியைப் பெற விரும்புவேனே யன்றி, மற்று அரசு—(அதற்கு மாறாக ஸ்வாதந்தர்யம் பாராட்டுகிற) இதரமான அரசாட்சியை, அரசாக எண்ணேன்—அரசாட்சியாக நினைக்கவே மாட்டேன்.

[கருத்து] ஸேதுபந்தநம் பண்ணி ஸமுத்ரத்தின் அக்கரையை அடைந்து, லங்கா ராஜ்யத்திலுள்ள அரக்கர்களையும் லங்காதிபதியான ராவணனையும் கொன்று, அவன் தம்பியான விபீஷணாழ்வானுக்கு லங்கா ராஜ்ய பட்டாபிஷேகம் பண்ணி ஸீதையை மீட்டுக்கொண்டு, அவளோடு தில்லைநகர் திருச்சித்ர கூடத்தில் இனிதாக அமர்ந்தருளிய ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தாமரைகளைத் தலைமேற் சூடும் அரசாட்சியைப் பேறாகக் கொள்வேனேயன்றி, மற்ற அரசாட்சியை ஒரு பொருளாகக் கொள்ளேன் என்றபடி.

[விசேட உரை] ராமபிரான் ஸீதையிருக்குமிடத்தை ஹநுமானால் உணர்ந்த பின்னர், அவன் வாநர ஸேனையுடன் புறப்பட்டுக் கடற்கரையை அடைந்து, கடலைத் தாண்டுவதற்குரிய உபாயத்தைக் கடல் அரசனை வருணனிடம் ப்ரார்த்தித்து, அங்குத் தர்ப்பசயநத்தில் எழு நாளளவும் ப்ராயோபவேசமாய்க் கிடக்க, ஸமுத்ர ராஜன் அப்பெருமானது மஹிமையை அறியாது உபேக்ஷித்திருக்க, அது கண்டு ஸ்ரீராமன் கோபங்கொண்டு, "அனைவரும் நடந்து செல்லுமாறு அக்கினிக் கணையை எய்து கடலை வற்றச் செய்வேன்; லக்ஷ்மணா! கணையை எடு" என்று உக்ரமாகத் தொடங்கிய வளவில், கடலரசன் அஞ்சி ஓடிவந்து அப்பெருமானைச் சரண மடைந்து அணை கட்டுதற்குத் தன் முதுகிடம் தந்து நிற்க, ஸ்ரீராமமூர்த்தி வானரங்களைக்கொண்டு மலைகளால் அணை கட்டுவித்தனன் என்பதும்;

லங்கையில் விபீஷணன் தன் தமையனான ராவணனுக்கு எவ்வளவோ நல்லறிவு கூறியும் கேளாமையால் அவனை அடியோடு துறந்து, நான்கு மந்திரிகளுடன் ராமபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அவனுக்கு அபய மளித்து அப்போதே அவனுக்கு லங்காராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்து, அவனுடனே கடல் கடந்து லங்கை சேர்ந்து, அங்குத் தன்னோடு போர்புரிய வந்த அரக்கர்களையும் லங்காதிபதியான ராவணனையும் வேரறக் களைந்து கொன்று, விபீஷணனை இலங்கை அரசனாக்கி ஸீதையை மீட்டுக்கொண்டு மீண்டனன் என்பதும் இங்குக் குறிக்கப்பட்டுள்ள வரலாறுகள்.

[விசேட உரை] "கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்" "வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம் கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்" என்று இவர் தாமே 'ஊனேறில்' பணித்தபடி, இந்நிலவுலக அரசாட்சி, உயிரைக் கர்ம பந்தத்தில் செலுத்தி மீண்டும் பிறப்பைச் செய்வதையும், எம்பெருமான்

திருவடிகளைத் தலைமேற் சூடுவதே கர்ம பந்தத்தை ஒழித்துப் புநராவ்ருத்தி யில்லாத பரமபதத்தை அளிக்கவல்லது என்பதையும், அதுவே பேரரசாட்சி யென்றும் இவ்வாழ்வார் மேற்கொண்டாராதலால், "தில்லைத் திருச்சித்ர கூடந்தன்னுள் அரசமர்ந்தான் அடிசூடு மரசையல்லால் அரசாக வெண்ணேன் மற்றரசு தானே" என்கிறார். "ராஜ்யம் பண்ணியிருக்கிறவன் திருவடிகளைச் சூடுகையாகிற ராஜ்ய மொழிய, அதுக் கெதிர்த்தட்டாக ஸ்வாதந்த்ர்யத்தைப் பார்க்கும் ராஜ்யத்தை ராஜ்யமாக எண்ணேன்" என்னும் வ்யாக்யாந வாக்யம் இங்கு நோக்கத்தக்கது.

8. அம்பொனெடு மணிமாட வயோத்தி யெய்தி
அரசெய்தி யகத்தியன்வாய்த் தான்முன் கொன்றான்
தன்பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச் செல்வி
உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்
செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதை கேட்டான்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
எம்பெருமான் தன்சரிதை செவியால் கண்ணால்
பருகுவோ மின்னமுத மதியோ மன்றே.

[இப்பாட்டால் ஸ்ரீராம பட்டாபிஷேகம், ராவணாதி ராக்ஷ வ்ருத்தாந்த சிரவணம், குசலவ காநம்—இவை சொல்லப்படுகின்றன.]

[பதவுரை] அம்—அழகிய, பொன் மணி—பொன்னையும் ரத்நங்களையும் கொண்டு அமைக்கப்பெற்ற, நெடு மாடம்—பெரிய மாளிகைகளையுடைய, அயோத்தி எய்தி—அயோத்யா நகரத்துக்கு மீண்டும் வந்து, அரசு எய்தி—அரசாட்சியை அடைந்து, தான் முன் கொன்றான்தன்—தன்னால் முன்பு கொல்லப்பட்டவனான ராவணனுடைய, பெருந் தொல் கதை—பெரிய பூர்வ வ்ருத்தாந்தங்களை யெல்லாம், அகத்தியன் வாய் கேட்டு—அகஸ்த்ய முனிவர் மூலமாய்க்கேட்டுணர்ந்து, மிதிலை செல்வி—ஜநகராஜன் திருமகளான ஸீதை, உலகு உய்ய—உலக முழுதும் உஜ்ஜிவிக்கும்படி, திருவயிறு வாய்த்த மக்கள்—பெற்ற தன் மக்களான குசலவர்களுடைய, செம்—சிவந்த, பவளம் திரள்—பவழம்போன்ற, வாய்—வாயினால், தன் சரிதை கேட்டான்—தனது சரித்திரமாகிய ராமாயணத்தைக் கேட்டருளியவனை, தில்லைநகர் திருச்சித்திரகூடம் தன்னுள்—தில்லைத் திருச்சித்திர கூடத்தில், எம்பெருமான்—எமது தலைவனை ஸ்ரீராமபிரானுடைய, சரிதை—சரித்ரத்தை, செவியால் கண்ணால் பருகுவோம்—காதாற் கேட்டும் கண்ணாற் கண்டும் அநுபவிப்போம். (அதுவே யன்றி) இன் அமுதம்—இனிய தேவாம்ருதத்தையும், மதியோம்—(ஒரு பொருளாக) மதிக்க மாட்டோம், அன்றே—அல்லவா?

[கருத்து] ராவண வதாநந்தரம் ராமபிரான் ஸீதையைச் சிறையினின்றும் மீட்டு அயோத்தியை அடைந்து திருமுடி சூடி, அகத்திய முனிவரிடமிருந்து ராவணாதி ராக்ஷஸர்களின் பூர்வ வ்ருத்தாந்தங்களைத் தன் குமாரர்களான குசலவர்

கள் ராமாயணத்தைக் கானம் செய்யச் செவிசாய்த்தும், தில்லைத் திருச்சித்ரகூடத்தில் நித்யவாஸம் பண்ணும் எம்பெருமானுடைய திவ்ய சரித்ரத்தைக் காதாற் கேட்டும், அவன் திவ்ய திருமேனியைக் கண்ணால் தரிசித்தும் அநுபவிப்போமேயன்றி, இனிய தேவாம்ருதம் கிடைப்பினும் அதனை ஒரு பொருளாக மதியோம் என்பதாம்.

[விசேட உரை] ராமபிரான் ஸீதையை மீட்டுக்கொண்டு விபீஷணன் ஸுக்ரீவன் முதலானோரோடும் புஷ்பக விமானமேறி அயோத்தியை அடைய, அங்கு ராமன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பரத சத்ருக்நர் அப்பிரானை எதிர்கொண்டழைத்து உபசரித்து மிக்க மகிழ்ச்சியுடன் வஸிஷ்டர் ஸுமந்த்ரர் முதலானோரைக் கொண்டு பட்டாபிஷேகம் செய்விக்க, அம்மஹோத்ஸவம் வெகு ஸம்ப்ரமமாக நடந்தேறியது. இவ்வாறு ராமபிரான் திருமுடி சூட்டிக்கொண்டு எழுந்தருளியிருக்கையில் அகஸ்த்யர், ஜமதக்நி, பரத்வாஜர், வஸிஷ்டர், காசியபர், அத்ரி, தௌம்யர் முதலான முனிவர்கள் ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனைக் கண்டு க்ஷேமம் விசாரிக்கவும் கொண்டாடிப் போற்றவும் கருத்துக் கொண்டவர்களாய், "ராமா! தேவர்க்கும் முனிவர்க்கும் பெருந் துன்பங்களை இழைத்துவந்த ராவணன், கும்பகர்ணன், இந்த்ரஜித் முதலிய அரக்கர்களைக் கொன்று நாட்டுக்கு நன்மைசெய்த உன் கருணை இருக்க எங்கட்கு என்ன குறை?" என்று போற்றிப் பேச, ராமசந்த்ரன் "அவ்வரக்கர்களுடைய பிறப்பு, வலிமை, அவர்கள் வரம்பெற்றது, முதலிய வரலாறுகளை அடியோங்கட்கு விளங்கச் சொல்லவேண்டு" மென்று கேட்க, அவர்களுள் அகஸ்த்யர் அவ்வரலாறுகளை யெல்லாம் விஸ்தாரமாகக் கூறினதும்;

ஒரு வருஷகாலம் ராவணன் வஶத்திலிருந்த பிராட்டியை அழைத்துக் கொண்டுவந்த காரணத்தால் நாட்டார் சிலர் குறை கூறினர் என்று ஒற்றர் மூலம் கேள்விப்பட்ட ராமபிரான், லோகாபவாதத்துக்கு அஞ்சிச் சீதையை லக்ஷ்மணனைக்கொண்டுகாட்டில் மஹர்ஷிகளின் ஆச்ரமத்தருகில் விடும்படி நியமிக்க, லக்ஷ்மணன் அங்ஙியமனப்படி அவளைக் கங்கைக் கருகிலுள்ள வால்மீகர் ஆச்சிரமத்தில் கொண்டுவிட, அங்கு அவளுக்குக் குஶனென்றும், லவ னென்றும் இரண்டு குமாரர்கள் அவதரித்தன ரென்பதும்;

ராமபிரான் அசுவமேதயாகம் செய்கையில் அவர்கள் ராமாயணத்தை அதிமதுரமாய்க் கானம் செய்ய, அப்பிரான் அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றனன் என்பதும் இப்பாசுரத்தில் பணிக்கப்பட்டுள்ள விஷயம்.

அகத்தியன்—விந்த்ய மலையை அடக்கினவன். குடமுனி; கும்பமுனி.

மிதிலை—ஜநக குலத் தலைவனான மிதி என்னும் அரசனால் அமைக்கப்பட்ட நகரம்.

ராமாம்ருதத்தை ஸேவிப்பதும், அவன் கதாம்ருதத்தைக் கேட்பதும் தேவாம்ருதத்திலும் சிறந்ததென்பது தோன்ற "செவியாற் கண்ணாற் பருகுவோம் இன்னமுத மதியோம்" என்றார்.

மிதிலைச் செல்வி...............மதியோ மன்றே—"ஸ்ரீ ஜநகராஜன் திருமகள், ஜகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி பெற்ற குசலவர்கள் பேசத் தம்முடைய வ்ருத்தமான ராமாயண கதையைக் கேட்டருளினவர், இன்று திருச்சித்ரகூடத்திலே நித்யவாஸம் பண்ணுகிற, என்னுடைய நாதனுடைய வ்ருத்தாந்தத்தைத் திருவடியைப்போல ஸர்வேந்த்ரியங்களாலும் அநுபவிக்கப்பெற்ற நாம், தேவஜாதி அநுபவிக்கிற அம்ருதத்தை ஒன்றாக மதியோம்" என்ற வ்யாக்யாந வாக்யம் இங்கு அநுஸந்தேயம். [தொடரும்]

ஸ்ரீ:

பகவத் கடாக்ஷத்துக்கு ஹேது மூலங்கள்

பரம புருஷனைத் தினைத்தனையும் விடாதே அநுபவிக்க ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர், அவித்யா கர்மாதி ப்ரவாஹத்தில் அகப்பட்டுக் கரையேற விரகற்று வருந்துகிற படியைக் கண்ட காருணிகன், முதல் முதலில் சில ஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம் பண்ணுகிறானென்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அந்த ஸுக்ருத விசேஷங்கள்:— (1) அஜ்ஞாதங்கள், (2) யாத்ருச்சிகங்கள், (3) ஆநுஷங்கிகங்கள், (4) ப்ராஸங்கிகங்கள், (5) ஸாமாந்ய புத்தி மூலங்கள் என்று ஐந்து வகைப்படுமாம்.

(1) இது நல்ல கார்யமென்று ஒன்றை அறிந்து கொள்ளாமலே அதைச் செய்ய நேர்ந்தால் அது அஜ்ஞாதம் 'இது என்ன மலை!' என்று ஒருவன் கேட்க, இது பெருமாள் எழுந்தருளியிருக்கும் மலை என்பதை அறியாமலிருக்கும் மற்றொருவன், 'இது திருமாலிருஞ் சோலை மலை' என்று பெயரை மாத்ரம் சொல்லுகிறான். அது ஒரு ஸுக்ருதமாக முடியும்.

(2) இது ஸுக்ருதமென்று தெரிந்தாலும் இதைச் செய்யவேண்டுமென்னும் நினைவு இராமலே அதைச் செய்தால் அது யாத்ருச்சிகம். மாட்டைத் துரத்திக் கொண்டு போகும்பொழுது, மாடு ஆலயத்தைச் சுற்றி ஓட, அதைத் துரத்திப் போகிறவனும் அந்த ஆலயத்தை ப்ரதக்ஷிணமாக ஓடுகிறான். இதுவும் ஒரு ஸுக்ருதமாக முடியும்.

(3) இது ஸுக்ருதமென்று தெரிந்து அந்த நினைவுடன் அதைச் செய்தாலும், அது ப்ரதாநமாகக் கருதப்படாமற் போனால் அது ஆநுஷங்கிகம். ஒருவன் வழியுடன் போகிறான். வழியில் ஒரு ப்ராஹ்மணன் எதிரில் வர, அவனை ப்ரதக்ஷிணமாகப் போனால் அது ப்ரதாந கார்யமென்று நினைக்கப்படாமற் போனாலும், அதுவும் ஒரு ஸுக்ருதமாக முடியுமாம்.

(4) இது ஸுக்ருதமென்று அறிந்து, அதை அந்த நினைவுடன் ப்ரதாநமாகக் கருதிச் செய்தாலும், அது இதம் பரமாகக் கருதப்படாமல் அதற்கு ப்ரஸக்தி நேரும்பொழுது மாத்ரம் அது செய்யப்பட்டால் அது ப்ராஸங்கிகம். ஒருவன் சேலை வாங்கக் காஞ்சீபுரம் போகிறான். அப்பொழுது ப்ரஸக்தி நேரவே ஆலயம் போய்ப் பெருமாளைத் தொழுகிறான். இதுவும் ஒரு ஸுக்ருதமாக முடியுமாம்.

(5) இது ஸுக்ருதமென்னும் அறிவு இருந்து, இதை ப்ரதாநமாகச் செய்யவேண்டும் என்னும் நினைவுமிருந்து, இதை இதம்பரமாகவே செய்வதாக ப்ரவ்ருத்தித்தாலும் ஒரு பயனையும் விசேஷித்துக் கருதாமல், கேவலம் 'இது நல்ல கார்யம்' என்னும் எண்ணத்துடன் மாத்ரம் அது செய்யப்பட்டால் அது ஸாமாந்ய புத்தி மூலம். ஒரு திவ்யதேச யாத்ரையாக ஒருவன் போகிறான். ஆனால் அது ஒரு நல்ல கார்யமென்று மாத்ரமெண்ணிப் போகிறானேயொழிய, வேறு ஒரு பயனையும் உத்தேசித்து அவன் போகவில்லை. இதுவும் ஒரு ஸுக்ருதம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

★ ஸ்ரீ தேசிகன்

ஆஸ்திக சிகாமணிகளே! ஸ்ரீ தேசிக தர்சன நிஷ்டர்களே! இந்த ஸபையின் இரண்டு வருஷங்களின் பூர்த்திகள் கொண்டாட இன்று நாம் இங்குக் கூடியுள்ளோம். இதில் அடியேனை இந்தப் பதவியில் இருக்குமாறு ஸ்ரீ தேசிக தர்சன நிஷ்டர்களாகிய ஸபை அதிகாரிகள் இட்ட கட்டளையை மீறமாட்டாதவனாய் அதற்குக் கீழ்ப்படிந்து இதில் வர்த்திக்கிறேன். ஞானத்திலும் சீலத்திலும் வயதிலும் தெய்விக ஸம்பத்தியிலும் பலபடி உயர்ந்திருக்கும் பெரியோர்கள் அடியேனை இந்த நிலையில் வைத்து ஆள்வது, ரிஷிபத்னிகள் பகவந் நாமாக்களைச் சொல்லப் பழகிய கிளிகளைச் சரியாகச் சொல்லுகிறதா என்று கேட்டு விளையாடுவது போலாகும். அப்பறவைகள் பிசகுவதும் இவர்கள் விளையாட்டிற்கு அதிக உத்ஸாஹத்தைக் கொடுப்பதுபோல், அடியேன் சிற்றுரையில் ஏற்படக்கூடிய பிழைகளும் தேவரீர்களுக்கு ஹாஸ்ய ரஸத்தை ஊட்டி மகிழ்விக்கும் எனக் கருதிச் சில சொல்லத் துணிகிறேன்.

தமிழில் 'தேசிகன்' என்னும் சொல்லுக்கு வணிகன் என்றும் ஆசான் என்றும் இரு பொருள்கள் உள. 'தேசிகன் வணிகன் ஆசான்' என்பது சூடாமணி நிகண்டு. நம் தேசிகனை ஆசான் என்றமட்டில் உணர்வது போதாது. உலகமறிந்த வணிகர்களுக் குள்ளெல்லாம் இவன் உயர்ந்த பொருளைக் கொண்டு விலை செய்யும் வணிகன். மிக்க விலையுள்ள பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, அவை கிடையாத வேறிடங்களில் கொண்டுபோய் உயர்ந்த விலைக்கு விற்று நல்ல லாபத்தை அடைபவன் வணிகன் என்று உலகம் அறியும். விலையில்லாத (அதாவது: யாரும் விலைமதிக்கவும் கொடுக்கவும் முடியாத) பொருள்களை (சாஸ்த்ர தத்வங்களையும் அர்த்தங்களையும்) யாரும் அறியாத (அதாவது: வேத சாஸ்த்ரங்களில் மறைபொருளாகக் கிடந்த) இடங்களில் தேடி வாங்கி (மனத்திற் கொண்டு) இவை கிடையாது தவிக்கும் இடங்களாகிய ஸம்ப்ரதாய நிஷ்டர்களுக்கு அவர்களுடைய பக்தி ச்ரத்தையாகிய விலைக்கு மட்டில் விற்று அவன் த்ரவ்ய லாபம் அடைவதைப்போல் அன்றிக்கே, படிப்போரும் கேட்போரும் அனுஷ்டிப்போரும் ஆத்ம லாபம் அடையச் செய்வதாக்கும் இவன் விசித்ர வாணிபம் இருந்தபடி. தேசிகன் என்னும் வட. சொல்லுக்கு வழி காட்டுபவன் என்பது தாதுப் பொருள். கார்யாகார்யங்களையும் விதி நிஷேதங்களையும் தன்னை அடுத்தவனுக்கு எடுத்துக் கூறி, அவனை நல்வழிப்படுத்தி, இவ்வுலகி லுள்ள மட்டும் பாபதோஷங்கள் இல்லாத நல்வாழ்வும் பிறகு மோக்ஷ பர்யந்தமான நற்கதியும் ஸித்திக்கும்படி வழிகாட்டுபவன் ஆசானாதலின், அவ

---

* மதுரை ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபையின் 13, 14-வது வருஷப் பூர்த்தி கொண்டாட்ட தினமாகிய பார்த்திவஸு மாசிமீ 19உ (2—3—46) தலைமை வகிக்கும் தார்மிக ரத்னப்ரதீப ஸ்ரீ உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி வாசித்த அத்யக்ஷர் உரை.

னுக்குத் தேசிகன் என்பது பெயராயிற்று. பட்டப் பெயராகவோ காரணப் பெயராகவோ மற்றவர்கள் தேசிகன் என்ற சொல்லைத் தங்கள் பெயருடன் சேர்த்துக்கொண்ட போதிலும், இச்சொல் இடுகுறிப் பெயராக இவன் ஒருவனுக்கே தமிழ்மொழி வழங்கும் நாடுகளிலும் பிற நாடுகளிலும் அமைந்து கிடக்கும் திறம் ஒன்றே இவனைப் பரமாசார்யன் ஆக்கித் தருகிறது.

தேசிக பக்தர்

இவர்கள் திறன் முன்னமே குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு அரும்பெறல் மணிகளாக விளங்கும் அபூர்வ தத்வங்களையும் அர்த்தங்களையும் தேடிக் கோத்துத் திரட்டித் தந்த திறம் ஸ்ரீ தேசிகனுடைய தென்பது ஸுப்ரஸித்தம். இவரைப் பக்திசெய்வதானது, இவர் பாடுபட்டுத் தேடிய பொருள்கள் நாடுநட்டுச் செழிக்குமாறு அவைகளைத் தாம் தாம் அன்புடனும் ஆர்வத்துடனும் இன்புடனும் கற்றுக் கருத்துட்கொண்டு பலருக்கும் சொல்லி, அந்த ஞானத்தைப் பரவச்செய்வதே. அவ்வாறு செய்வோர்தாம் தேசிக பக்தராவர். இந்தப் பரம கைங்கர்யத்தையே தம் வாழ்க்கைப் பயனாகக் கொண்டிருக்கும் மஹான்கள் கூடியிருக்கும் இந்த ஸ்தஸ்ஸில் கைகூப்பித் தலைவணங்கும் பாக்யம் அடியேன் இன்று பெறுகிறேன். அதனால் இதுதான் ஸ்ரீ தேசிக பக்த ஸபையாகும். பகவத் ஸேவையால் பெறும் பயனினும் பாகவத ஸேவை ப்ரபலமான பயனைத் தரும் என்பதும், ராம ராஜ்யத்தினும் பாதுகா ராஜ்யம் மேற்பட்டிருந்த திறத்தால் விளங்குவதுபோல, தேசிகபக்த ஸேவை ஸ்ரீ தேசிக ஸேவையினும் உயர்ந்து நிற்கு மாதலால், இந்த ஸபையின் ஸேவை உயர்வற உயர்நலம் உடையதாயிற்று.

ஸ்ரீ தேசிகன் தந்த பொருள்கள்

விளைபொருளும் செய்பொருளும் வெவ்வேறு நாடுகளும் வணிகனுக்கு உபகரணமும் இடமும் ஆவனபோல், வேத சாஸ்த்ரங்களில் உள்ள தத்வங்களும் அர்த்தங்களும் அவைகளை வெளியிடும் பாஷா பேதங்களும் ஸ்ரீ தேசிகனுக்கு உபகரணமும் தேசங்களும் ஆயின. வடமொழி வேத சாஸ்த்ரங்களில் உள்ள எல்லாப் பொருள்களையும் திரட்டி உருவாக்கி 'தேசிக ப்ரபந்தம்' என்னும் தமிழ் நூலாகவும், நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களிலும் மற்றும் அரும் பெரும் தமிழ் நூல்களிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் எடுத்தேற்றி த்ரமிடோபநிஷத் ஸாராவளி முதலான வடமொழி நூல்களாகவும் ஆக்கித் தந்த பெருமை அவர் பாலுள்ளது. ஆனதால் இவருடைய ஸம்ப்ரதாயம் ஒன்றுதான் உபய வேதாந்த ஸம்ப்ரதாயம் என்று நாம் மார்தட்டி அறைகூவத் தக்கது. இந்த ஆசார்யவர்யர் வடமொழியில் செய்துள்ள நூல்களின் வகைகளும் வேறுபாடுகளும் எண்ணிறந்தன. வைராக்ய பஞ்சகம் முதலான ஐந்து பாக்களால் ஆகிய நூல் முதல் அஷ்டகம், தசகம், பஞ்சாசத், ஸப்ததி, சதகம், (பாதுகா) ஸஹஸ்ரம் என்னும் ஆயிரம் பாக்களுள்ள நூல்வரை ஸ்தோத்ரங்களும், யாதவாப்யுதயம் முதலான பார காவ்யங்களும், ஸங்கல்ப ஸூர்யோதயம் முதலான மஹத் தானநாடகங்

களும், ஹம்ஸ ஸந்தேசம் முதலான ப்ரபந்த வகைகளும் இவர் இயற்றியுள்ளார். இவர் ச்லோகங்களும் பாகங்களும் எல்லா மாதிரிகளிலும் ரீதிகளிலும் பக்வங்களிலும் பல்வேறு படியாக அமைந்து கிடக்கின்றன. இவைகள் இவர் கவித்திறத்தைக் குறிப்பன. வடமொழியில் இவர் திறன் இப்பரத கண்டம் முற்றும் அறியக் கிடந்த தெனினும், தென்மொழியில் இவர்க் கிருந்த திறன் அதில் ஒரு சிறிதும் குறைந்ததில்லை என்பதைக் காட்டிலும், பலபடி மேலானது என்று சொல்வதே சாலப் பொருந்தும். இதை இவரது தமிழ் நூல்களை ஆராய்ந்து ஆராய்ந்து உணரவேண்டுமே யன்றி, இவண் விரித்துரைக்க இயலாது.

அநுஷ்டாந ஸுலபத்வம்

இவர் தமிழ் நூல்களுக்குள்ள சாற்றுக் கவிகளில் இவர் சொற்களைப் 'பாரொன்றச் சொன்ன பழமொழிகள்' என்றார். 'பார்' என்றது பூமியையும், அது இட ஆகுபெயராக அதில் வாழ்வோரையும் குறிக்கும். 'ஒன்ற'—அவர் வாழ்க்கை நலனுக்குப் பொருந்த என்று பொருளாகும். இதனால் ஸுலப ஸாத்ய மாய் இல்லாமல், கடினமாயும் அஸாத்யமாயும் வேத சாஸ்த்ரங்கள் வகுத்திருந்த அநுஷ்டேய பாகங்களை மனத்தில் வாங்கி, அவைகளை அனுஷ்டித்தால் கிடைக்கும் பயன் சிறிதும் குறைவின்றி எந்த ஸுலப ஸாத்யமான மந்த்ரஜபம் ஸ்தோத்ரம் முதலானவற்றால் கிடைத்துவிடும் என்று ஸ்வாமி கண்டு, இந்த ஸுலப ஸாத்ய மான மார்க்கங்களை நமக்கு விதித்திருக்கிறார் என்பது புலனாகிறது. இங்ஙனம் ஸ்வாமி விதித்தவை ஸ்வகபோல கல்பிதங்களோ நூதன ஸ்ருஷ்டிகளோ என்று யாரும் பூர்வபக்ஷம் செய்யாமலிருக்க, இவைகளும் பூர்வஸூரிகளால் சொல்லப் பெற்ற வழிகள்தாம் என்பது விளங்கப் 'பழமொழிகள்' என்றார். இவ்விதச் சுருக்க வழிகளும் ஆழ்வார்கள் காட்டிப் போந்தவையாம். உதாரணமாக: திருமங்கை மன்னன் விபவகாலத்தில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் வேதபஞ்சாதி ஸ்வரத்துடன் வைதிக நிஷ்டர்களால் ஓதப்பெற்று வந்ததாகத் தெரிகிறது. அதை அந்த ஸ்வரம் பிசகாமல் அத்யயனம் செய்வது எவ்வளவு ச்ரமம் என்றும், அதைத் தினந்தோறும் அனுஸந்திப்பது எவ்வளவு கஷ்டஸாத்யம் என்றும், வைதிகர்களுக்கு நன்றாகத் தெரியும். இதன் பயனை வெகு ஸுலபமாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் அடையவேணும் என்னும் பரமக்ருபையோடு, திருமங்கை மன்னன் பெரிய திருமொழி முதல் பத்து ஐந்தாம் திருமொழியாக 'கலையும் கரியும்' என்னும் பதிகத்தை ஸாதித்தருளி, "பேராயிரமும் ஓதுமின்கள் அன்றி இவையே பிதற்றுமினே" என்ற மகுடத்துடன் முடித்து, இதைப் பாட ஸ்வர நிபந்தனை யில்லை என்பதையும், மழலையாகவோ குழறியோ சொல்லலாம் என்றுகூட நமக்கு அனுமதி கொடுத்து, ஓதுதலுக்குப் பதிலாய்ப் பிதற்றுங்கள் என்று சொல்லிப்போந்தார். இவர் க்ருபையை அடியொற்றி யன்றோ நம்மாசார்யனும் வர்த்திக்கின்றார்.

தேசிக ப்ரபந்தம்

ஸ்வாமி ஸாதித்துள்ள தேசிக ப்ரபந்தம், இருபத்து நான்கு நூல்கள் அடங்கிய ஒரு தொகை நூல் என்று பெரியோர் கூறுவர். அவைகளில் பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் எனும் ஐந்து நூல்கள் கிடையாமல், மிகுதியாய்

உள்ள பத்தொன்பது நூல்களே இப்பொழுது கிடைக்கின்றன. அவைகளிலும் சில சில இடங்களில் பாடங்கள் மாறியும் எழுத்துக் குறை அசைக் குறைகள் ஏற்பட்டுச் சீர்குலைந்தும் தளை சிதைந்தும் இருந்தவைகளை, ஸ்ரீ. உப. ஒப்பிலியப்பன் ஸன்னிதி வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ தேசிகன் திருவடிகளில், தம்மிடத்தில் பரம்பரா ப்ராப்தமாய் அமைந்து கிடக்கும் ஆர்வத்தாலும் திருத்தமப்பனாரின் திருவடி பலத்தாலும் மிகச் செவ்வைப்படுத்தி, மூலம்மட்டும் ஒரு பதிப்பும் உரையுடன் மற்றொரு பதிப்பும் வெளியிட்டிருக்கிறார். இந்த நூல் ஸர்வ ஜனங்களும் படித்துத் தெரிந்துகொள்ளும்படி வெளிவந்திருக்கிறது. கிடையாத நூல்கள் ஐந்தும், பெண்டிர் பாட்டென்னத் தட்டில்லை.

ஆடவர்க்குரிய மிகுந்த நூல்கள் நானூறு பாசுரங்களால் ஆயின. அவைகளில் பொதிந்து கிடக்கும் பொருள்களும், அவைகள் அமைந்துள்ள வரிசையும், ஸ்ரீ ஸ்வாமியின் ஆத்ம தத்வத்தின் ஒழுக்கமாகவே அவைகளை உணர வழிகாட்டுகின்றன. அம்ருதரஞ்சனி, அதிகார ஸங்க்ரஹம், அம்ருதாஸ்வாதினி என்னும் நூல்கள், ஸ்ரீ ஸ்வாமி வேத சாஸ்த்ரங்களில் அதிகரித்து முகந்துகொண்ட சாஸ்த்ரார்த்தங்களை தெளிய விளக்குவன. நாலாவது பரமபத ஸோபானம். இது ஶாஸ்த்ரார்த்தங்களின் உதவியைக்கொண்டு மோக்ஷ பர்யந்தமான ப்ராப்தியை அர்ச்சிராதி மார்க்கத்தில் அடையும் ஞானலாபத்தை உணர்த்துகிறது. ஐந்தாவது பரமதபங்கம். இது, இந்தத் தர்சனத்தில் த்ருடப்பட்டு நின்ற அறிவையும் உணர்வையும் கலக்கவரும் மதாந்தரங்களின் குறையை எடுத்துக் காட்டி, இதில் உள்ள ஏற்றத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது. ஞான கோசரத்தில் இவ்விதம் உறுதியடைந்த அறிவுடையவரான ஸ்ரீ ஸ்வாமி பகவத் ஸ்வரூபத்தை ஆராய்ந்து அனுபவிக்கப் புகுங்கால், ஸ்ரீ ஹஸ்திகிரியிலுள்ள எம்பெருமான் பக்கல் ஈடுபாடுண்டாகி, தெய்விக ஸம்பத்திக் கெல்லாம் அரசனாய் விளங்கும் அவன் க்ருபையை அடைய வேண்டி ஹஸ்திகிரி மாகாத்மியத்தில் அனுபவம் செய்கிறார். அவன் பெருமையை உணர்ந்த அப்பொழுதே அடைக்கல மொன்றே உபாயம் என்பது விசதமாகி, அதைப் பதினொரு பாசுரங்களால் அதிகரித்து, அந்த உபாயத்திற்கு அடிப்படையான அர்த்த பஞ்சகத்வத எட்டாவது நூலில் சொல்லுகிறார்.

இவ்விதம் அர்த்தபஞ்சக ஞானத்துடன் அடைக்கலம் புகுந்த ப்ரபன்னன் மன மொழி மெய்களால் வாழ்நாளில் அநுஷ்டிக்கவேண்டிய க்ரமங்களை ஸ்ரீ வைஷ்ண தினசரி, திருச்சின்னமாலை, பன்னிருநாமம் என்னும் நூல்களால் வெளியிடுகிறார். இந்த நூல் அனுஷ்டானங்களால் அழுக்கும் திருக்கும் அற்று, மாசில் மனம்தெளி முனிவரினும் உயர்பதவி யுற்ற மால் உகந்த அடியவராயிருப்பவர், திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகங்களுக்கு உண்மைப் பொருள்களை உணர்ந்து உலகுக்கு உதவற்பால ராதலின், இவைகளுக்குத் தனித்தனியே மூன்று நூல்கள் இடுகிறார். இவைகளின் தத்வார்த்தங்க ளெல்லாம் ஸ்ரீ பகவத் கீதையில் பொதிந்து கிடக்கின்றன என்று அந்த நூலுக்கு ஏற்றம் கொடுத்துப்

பதினெட்டு அத்யாயங்களின் பொருள்களேயும் பதினெட்டுப் பாட்டுக்களில் அமைத்துப் பயனும் ப்ரயோகமும் காட்டி, இருபத்தொரு பாடலில் ஒரு நூல் இயற்றுகிருர். இந்த நிலேயில்தான் ஸ்வாமி தம்மை நிறைவுற்ற அறிடையவராகக் கருதிக்கொள்கிருர்.

இதன் பிறகுதான் தம்முடைய ஆத்மோஜ் ஜீவநார்த்தம் ஸம்பூர்ண ஞான விசிஷ்டயான ப்ரபத்தியைச் செய்யத் திருவுள்ளங்கொண்டு, தபோ மஹிமையால் ஸ்ரீகருடாழ்வானேயும் ஹயக்ரீவனேயும் ஔஷதகிரியில் ப்ரத்யக்ஷம்செய்துகொண்டு, திருவஹீந்திரபுரத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவ நாதன்பால் ஸம்பூர்ண ஞான விசிஷ்ட ப்ரபத்தியை அநுஷ்டித்து, அவன் பக்கல் தமக்குள்ள க்ருதஜ்ஞதையையும், ப்ரத்யபிஜ்ஞையையும் நித்யமாக்கி, மும்மணிக் கோவையாலும் நவமணி மாலேயாலும் தேவநாதனேப் போற்றி மகிழ்கிருர். இதை நோக்க, அடைக்கலப்பத்தில் அவர் திருவுள்ளம்நின்ற நிலே அஸுரராக்ஷஸ ஸம்பத்தி களின் கொடுமைகளே வென்று தெய்வீகஸம்பத்தி தம்மிடம் நிறைந்து தம்மனம் அதில் நிலேபெற்று, வைதிக ஞாநாநுஷ்டானங்களில் தம் மனமும் செயலும் உத்கதி அடையவேணும் என்கிற நோக்கத்தோடு ஆர்த்தனுகவும் ஜிஜ்ஞாஸுவாக வும் ஞான நிஷ்டையாகிய பயனே வேண்டும் அர்த்தார்த்தியாகவும் அவர் செய்த ப்ரபத்தி அடைக்கலப்பத்தில் உள்ளதென்று நினேக்கவும் கூடும். அதையே இவர் ஞானியாகச் செய்த ப்ரபத்தி என்று கொள்ளவும் தட்டில்லே.

இத்தனே படி கடந்த பிறகுதான் நன்றி கூறவேண்டியது ஆழ்வார்களுக் கும் அவர்கள் திவ்ய ப்ரபந்தங்களுக்கும் என்பதை ஸ்ரீ ஸ்வாமி கருதுகிருர். ஏனெனில்: அதிகார ஸங்க்ரஹத்தின் ஆரம்பத்திலே ஆழ்வார்களுக்கு நன்றி செலுத்தி, அவர்கள் நூல்களால் வேதங்களில் மறைந்து கிடந்த அர்த்தங்கள் வெளியாயின என்பதைச் சொல்லித் தொடங்கியதற் கேற்ப, ஆழ்வார்கள் திரு நக்ஷத்ரங்களேக் கொண்டாடவேண்டியதும், அவைகளே மறவாமல் அநுஷ்டிப் பதற்கு அவரவர் பிறந்த மாதம் நக்ஷத்ரம் முதலியவைகளேக் குறித்தும், அவர் கள் திவ்ய ஸூக்திகள் பிழை பட்டோ சிதைந்தோ மலினமாகவோ போகாமல் என்றும் நின்று நிலவ அவைகளின் எண்ணிக்கைகளே வ்யஷ்டி ஸமஷ்டிகளாக எடுத்துக் கூறி ப்ரபந்த ஸாரத்தை இயற்றுகிருர். இந்த நூலில் ஸ்ரீ ஸ்வாமியின் உமக்ரம உபஸம்ஹார வைசித்ர்யம் வெகு அழகாக விளங்குகிறது. "தேவு மற்றறி யேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்று தெய்வத் துக் கடைக்கலம் புகுவதையும் விட்டு, திருவாய் மொழிப் பாவின் இனிய ஓசை ஒன்றே என் ஆத்மாவுக்கும் உஜ்ஜீவனத்தைக் கொடுக்கும் என்று சபதமிட்டுத் திரிந்த மதுரகவிகளின் ப்ரபத்தியும் ஆசார்ய நிஷ்டையும் இந்த ஸம்ப்ரதாயத்தின் ஆணிவேர் என்று ஆரம்பித்த மதுரகவிகள், ஆழ்வாரைத் தமக்குப் பரமா சாரியனுகக் கொண்டதைப்போல் ஸ்வாமி தாம் பரமாசாரியனுகக் கொண்ட யதி ராஜனே ஆழ்வார்கள் கோஷ்டியில் சேர்த்து, வைகுண்ட பதியை ஆழ்வார் கதியா கக் கொண்டு அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்றதுபோல், அரங்கனேக் கதி யாகக் கொண்டு யதிராஜன் அவன் கோவிலுள் திருக்கோயில் கொண்டெழுந்

தருளி யிருப்பதைக்கொண்டு, அந்த யதிராஜன் அன்றித் தமக்குக் கதியில்லை என்றெடுத்துக் காட்டி, அவரையும் ஆழ்வார்கள் கோஷ்டியில் சேர்த்து, அந்த கோஷ்டியைப் பதின் மூன்றாக்கித் தாம் காட்டும் வழி மதுரகவிகள் காட்டிய நல்வழியாகிய தொல்வழியாவதற்குத் தாம் எம்பெருமானார் பக்கல் அவர் திவ்ய ஸூக்திகளைப் பாடித் திரியும் பாங்கும் பண்பும் உடையவனானால் போதும் என்ற தம் திருவுள்ளப்பாங்கை நன்கு விளக்குகிறார். இந்தப் பதின்மூன்று திருநக்ஷத்ரங்களையும் பகவந் நிவேதிதமாகவும் சாஸ்த்ரங்கள் அங்கீகரித்தவையுமான ஸாதுவான அந்நாதிகளின் விநியோகங்களால் கொண்டாடுவதும் உசிதம் என்பது தோன்ற, அடுத்து ஆகார நியமத்தை அமைத்தார் என்றாலும் பொருந்தும். ஆனதால் இந்த நூலை ஸ்ரீ தேசிகனின் திவ்ய சரிதை என்று கூடக் கொள்ளக் கிடக்கிறது.

ஸ்ரீ வைஷ்ணவ தினசரி

வேதசாஸ்த்ர விஹிதங்களாய், ஸாது ஸேவ்யமானங்களாய், அனுதிஸித்த புண்ய பல ப்ரதங்களாய், பரம்பராநுஷ்டேயங்களான அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்ற ஐந்து வகை ஆசரணைகளை அததற்குரிய காலத்தில் யதாசாஸ்த்ரம் அனுஷ்டித்துவந்த பெரியோர்கள் பஞ்ச காலபராயணர்கள் எனும் பெயர்பெற்று விளங்கினார்கள். இவைகளின் விபரங்களும் அனுஷ்டான முறைகளும் பலபடியாக நூல்களில் பரந்து கிடக்கின்றன. பரமக்ருபாளுவான கீதாசார்யன் இவ்வைந்தையும் செய்பவன் எவனும் அதன் பயனைத் தனக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்பது விளங்க 'ஹே, அர்ஜுனா! நீ செய்யும் அபிகமனத்தையும், நீ உண்பதற்கும் பிறரை உண்பிப்பதற்கும் எடுக்கும் உபாதானத்தையும், நீ வேள்வியிற் கொடுக்கும் ஆஹுதிகளையும், மற்றும் தானாதி கொடைகளையும், வேதாந்தார்த்த க்ரஹணம் ப்ரவசனம் முதலான தானங்களையும், நீ நிஷ்டையிலிருந்து செய்யும் தபஸ் யோகங்களையும் எனக்கு அர்ப்பணம் செய்' என்று பஞ்சகால பாராயணர்களைக் குறித்துச் சொன்னான். அதில் எழக்கூடிய ஐயங்களை எல்லாம் மாற்றி, 'ஆழ்வார்கள் திருவுள்ள முகந்த அர்ச்சாமூர்த்திகளில் அர்ப்பணம் செய்யுங்கள்' என்னும் பொருளை நம் மனத்தில் த்ருடப்படுத்தி, இந்நூலில் கரிகிரி கரிய காவலன்பால் இந்தப் பஞ்ச கைங்கர்யங்களையும் அர்ப்பணம் செய்து நமக்கு வழிகாட்டுகிறார். அவரவர் ஊரிலுள்ள எம்பெருமான் பக்கல் அவரவர் அர்ப்பணம் செய்வதும் முறையே. 'நானே பரம், நானே உத்தாரகம், நானே உபாயம், நானே உபேயம் என்று தன்னைப்பற்றி மார்தட்டிச் சொல்லிக்கொண்ட கண்ணனுக்கு ஆனதைக் கோயிலில் உள்ள எம்பெருமானுக்கு ஆக்கலாமோ?' என்னில், அவனுடைய பரத்வத்தையும் கல்யாண குணங்களையும் ஆழ்வார் உலகுக்கு நிரூபித்துக் காட்டியதும், மற்ற 990 பாசுரங்களின் அர்த்தங்களும் தன்னிடத்தில் அடங்கிக் கிடப்பதுமான திருவாய்மொழி முதற் பத்து முதல் திருவாய்மொழியை அடியொற்றி அதன் பாவினத்தில் இந்தப் பத்துப் பாசுரங்களையும் எழுதுகிறார்.

இதனால் கண்ணன் தனக்குச் சொல்லிக்கொண்ட பெருமை யெல்லாம், அவன் விபவ காலத்தில் அக்ரூரர் உத்தவர் முதலான ஸாதுக்களான ஆச்ரித

ஆஸ்திகர்களுக்கு ஆனதுபோல், அர்ச்சையில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களெல்லாம் ஆயிரம் பாசுரங்களுக்கும் ஒவ்வொருவரும் அடைவிடமாக நம்முடைய கைங்கர்யங்களின் அர்ப்பணத்திற்கு இலக்காவார் என்பது ஸ்வாமி திருவுள்ளமாகும் என்றறியக் கிடக்கிறது. ஸதாசார்யர்கள் பக்கல் இந்தப் பத்துப் பாசுரங்களைப் படித்துணரும் பாக்யவந்தர்களுக்கு நம் ஸ்ரீ தேசிகன் ஸம்ப்ரதாய அனுஷ்டானத்தை எவ்வளவு ஸுலபமாக்கிக் கொடுத்துள்ளார் என்பது நன்கு விளங்கும்.

இவைகளில் நிஷ்டிதமான சாஸ்த்ரங்களும் மிக எளிதில் உணரத் தக்கவையாய் ஸ்ரீ தேசிக ப்ரபந்தத்தில் வகுத்துரைக்கப் பெற்றிருக்கின்றன என்பதும் ஸுப்ரஸித்தம். ஆனதால், ஸம்பூர்ணமான ஸம்ப்ரதாய ஞான ஸம்பாதனத்தையும் மிக எளிதாக்கி, அதன் அனுஷ்டானத்தையும் இலகுவாக்கி, நம்மை உய்யக்கொண்ட இந்த மகதாசார்யன் பக்கல் நாம் பாராட்டவேண்டிய நன்றி மிகப் பெரிது. இது இவர் கருணை மிகுதியால் உலகுக்குச் செய்த உபகாரம். இதற்கு ப்ரதி செய்ய யாரும் ஆற்றகில்லார். "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்றல் அரிது" என்றும், 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற குறளும் இங்கே அனுஸந்தேயங்கள். ஸ்ரீ ஸ்வாமியினிடம் நாம் இருக்கவேண்டிய நிலையை அவர் திவ்ய ஸூக்தியே நமக்குக் காட்டுகிறது:—

"ஏற்றி மனத்தெழில்ஞான விளக்கை இருளனைத்தும்
மாற்றி னவர்க்கொரு கைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்ச்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே."

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ௵ ஆனிமீ

1௳ சனிக்கிழமை	...	சூந்ய திதி
2௳ ஞாயிற்றுக்கிழமை	...	மிதுன க்ருஷ்ண த்விதீயை திதி
11௳ செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
13௳ வியாழக்கிழமை	...	த்ரயோதசி - சதுர்த்தசி திதி த்வயம்
14௳ வெள்ளிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
24௳ திங்கட்கிழமை	...	ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
26௳ புதன் கிழமை	...	ஸர்வ ஏகாதசி
28௳ வெள்ளிக்கிழமை	...	சதுர்த்தசி திதி
29௳ சனிக்கிழமை	...	பூர்ணிமா திதி
30௳ ஞாயிற்றுக்கிழமை	...	அதிதி
31௳ திங்கட்கிழமை	...	மிதுன க்ருஷ்ண ப்ரதமை திதி

ஸ்ரீ:

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

ஸ்ரீ தேசிகனும் கண்ணனும்

[கருடபுரம் ஸ்ரீ. உப. தி. ஈ. திருமலாசார்யர், வ்யாகரண சிரோமணி, மாம்பலம்]

श्रीमन्निगमान्ताह्वयगुरुवरपद्मं शरण्यमेव परन्तेन ।
सत्त्वगुणेन धीवृत्तिसम्पद्यं नौमि तापत்रयशमनं तम् ॥

'தேசிகன்' என்று ஆசார்யர்களுக்குப் பொதுவான திருநாமம் இருக்கையிலும், நமது ஆசார்ய ரத்நமான நிகமாந்த மஹாதேசிகனிடத்தில் அத்திருநாமம் அநிதர ஸாதாரணமாக விளங்குவதன் காரணத்தையும், ஸ்ரீ தேசிகாவதாரத்தின் காரணத்தையும், தேசிகனுக்குக் கண்ணனிடத்தில் ஈடுபாடு அதிகம் என்பதையும், முதல் முதல் கிஞ்சித் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

தேசிகஸ்ய தேசிகத்வம்

"आचार्यत्वोपयुक्ता मुनिगणकथिताः देशिकेनैव चोक्ताः
सर्वे सम्भूय गुणाः सहर्षाः सन्ति तस्मिन् सर्वतन्त्रस्वतन्त्रे ।
शिष्यत्वोपयुक्ताः कविकुलगुणगणाः कूरनाथे यथासन्
नान्यत्राचार्यवर्गे क्वचिदपि नहि गुणाः प्रायशस्त्वल्पशस्ते ॥"

[ரிஷிகளால் சொல்லப்பட்டவைகளும், ஸ்ரீதேசிகனாலேயே அருளிச் செய்யப்பட்டவைகளுமான ஆசார்யனாக இருக்கைக்கு உபயுக்தமான 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட கல்யாண குணங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பெருமையுடன் 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரே' என்று இவ்வாசார்யனிடத்தில் விளங்குகின்றன. சிஷ்யத்வோபயுக்தமான 'ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ' என்று ஆரம்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் எப்படி கூரத்தாழ்வானிடத்தில் அமைந்திருந்தனவோ, அவ்விதமே ஆசார்ய வர்க்கத்தில் இக்கல்யாண குணங்கள் தேசிகனிடத்திலன்றி வேறொருவரிடத்திலும் இல்லை. பெரும்பாலும் சிற்சில குணங்களே மற்ற ஆசார்யர்களிடத்தில் காணப்படுகின்றன] என்று அண்ணனும்,

"देशिकान्निगमान्तार्यात् तद्भक्तात् सात्त्विकोत्तमः ।
तत्सूक्तेश्च प्रबन्धोऽन्यो नास्ति नास्तीति मे मतिः ॥"

[ஸ்ரீதேசிகனைவிட வேறு ஆசார்யனும், அவருடைய பக்தர்களைக் காட்டிலும் ஸாத்விக ஜனங்களும், அவருடைய ஸ்ரீஸூக்திகளைத் தவிர வேறு ப்ரபந்தமும் இந்தப் பூமியில் இல்லவே யில்லை] என்று தொட்டையாசார்யரும்,

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

[மேருமலை முதல் லங்கை வரையிலுள்ள எல்லா ஆசார்யர்களையும் ஸேவித்து இந்த வார்த்தையினால் ப்ரார்த்திக்கிறேன். அநிதர ஸாதாரணமான கவிதை, தர்க்க சாஸ்த்ரம், மீமாம்ஸை, வேதாந்தம், இவைகளில் தேசிகனைப் போல் யாராவது காணப்படுகிறார்களா?] என்று அரசாணிப்பாலை வேங்கடாசார்ய ஸ்வாமியும் அநுஸந்தித்தபடியே, நமது நிகமாந்த மஹா தேசிகனுக்கே மஹா விஷ்ணுவினிடத்தில் 'புருஷன்' என்ற ஸம்ஜ்ஞைபோல் 'ஸ்ரீதேசிகன்' என்ற திருநாமம் அநிதர ஸாதாரணமாக விளங்குகின்றது. ஆதலின் ஒவ்வொருவரும் அவரிடம் பக்தி செலுத்தக் கடமைப்பட்டவர். 'தேசிகனிடத்தில் பக்தியில்லாவிடினும் அவரிடம் த்வேஷமாவது இல்லாதவர்களிடத்தில் நான் அடிமையாகிறேன்' என்பதை

"ஸத்³வேஷாத³பி வாயேஷாம் வேதா³ந்ததே³ஶிகே।
விமுக்திருத்³வேஷமஹம் தேஷாம் த்³விஜீவிஷ வேஷ்யதாம்"

என்பதால் பெரியோர்கள் விளக்கி யிருக்கிறார்கள். ஒரு பெரிய மனிதன், தன் குழந்தைகளை லாளநம் பண்ணுமலிருக்கும் மனிதனிடத்தில் எவ்விதம் ஸந்தோஷப்பட மாட்டானோ, அவ்விதம் பகவான் தனது பக்தர்களை ஆதரிக்காதவர் திறத்தில் ஸந்தோஷப்பட மாட்டான். 'பகவதாச்ரிதர்களுக்குக் கார்ய ஸித்தியில் ஸம்சய மாகிலும், பகவத் பக்தாச்ரிதர்கள் திறத்தில் ஸம்சயமே யில்லை.' கேவலம் பாகவதர் விஷயத்தில் இவ்வித மிருக்க, ஆசார்ய ரத்ந விஷயத்தில் கேட்பானேன்? ஆதலின் குழாங்கள் குழாங்களாய்ப் பக்திசெய்ய ப்ராப்தம்.

ஸ்ரீ தேசிகாவதாரத்தின் காரணம்

"ஸாக்ஷாந்நாராயணோ தே³வ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்।
மக்³நாநுத்³த⁴ரதே லோகாந் காருண்யாச்சா²ஸ்த்ரபாணிநா॥"

என்றும், "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து' என்றும் சொல்லுகிறபடி, ஆச்ரிதர்களிடத்தில் அஜ்ஞாத நிக்ரஹையான கமல வாஸிநியான பிராட்டியும், பக்தர்கள் விஷயத்தில் ஒருக்கால் ஆச்ரிதர்கள் குற்றத்தை அவர்களுடைய ப்ராரப்த கர்ம பூயஸ்தையினால் ருஜுப்படுத்த ஆரம்பித்தாலும், அக்குற்றங்களையே குற்றமாகப் பாராட்டாத பரம காருணிகனான ஸர்வேச்வரன், இருள் தருமா ஞாலத்திலுள்ள இச்சேதநர்களை உஜ்ஜீவிப்பதற்காக அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்துடனேயே முதலில் தசாவதார ரூபமாகவும், பிறகு அபிநவ தசாவதாரமான ஆழ்வார்கள் ரூபமாகவும், பிறகு அஸ்மதாசார்ய ரூபமாகவும் அவதரித்தான். ஆனால் கர்ம பத்தர்களான நமது பிறவிக்கும் ஸர்வேச்வரனுடைய பிறவிக்கும் வாசியுண்டு. அது, "ஸஉ ச்ரேயாந்பவதி ஜாயமாந:" என்னும் ச்ருதியில் அவதாரணார்த்தமான 'உ' என்பது, தச்சப்தத்துடன் அந்வயிக்கும் போது 'பிறக்கப் பிறக்க ஸர்வேச்வரனே ச்ரேயஸ் உள்ளவனாக ஆகிறான்' என்றும், 'ச்ரேயாந்' என்பதோடு அந்வயிக்கும்போது 'இவ்வுலகில் பிறந்தால் ஏற்றமே உண்டாகிறது' என்றும், 'ஜாயமாந:' என்பதோடு அந்வயிக்கும்போது 'பிறந்தால்தான் ஸர்வேச்வரனுக்கே ஏற்றம்; விண்ணுலகிலேயே வீற்றிருந்தால் இந்த ஏற்றம் ஸித்திக்காது' என்றும் பொருளால் ஸித்திக்கும். மேலும் ஸர்

வேச்வரனன கீதாசார்யன், 'கர்மபந்த மூலமான பிறவி எனக்கு இல்லாவிடினும், நான் ஸ்வஸங்கல்பத்தால் பிறக்கிறேன். பலவித பிறவிகள் எனக்கும் உனக்கும் உண்டாகின்றன. ஆனல் எனது பிறவிகளை யான் அறிகிறேன்; கர்மபந்தனனதால் நீ உன் பிறவிகளை அறியமாட்டாய்' என்று அர்ஜுனன் மூலமாகத் தனது அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டான். ஸ்ரீ ராமாவதாரத்தில் காக விபீஷணாதி வ்ருத்தாந்தங்களினல் ஶரணாகத தர்மத்தையும், ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் கீதையில் அந்திமாத்யாயத்தில் அந்திம ச்லோக மூலமாக ஶரணாகதி ஸ்வரூபத்தையும், ஸ்ரீமந் நிகமாந்த தேசிகாவதாரத்தில் நிக்ஷேப ரக்ஷை முதலிய ஸ்ரீஸூக்திகளால் ஶரணாகதி ஸ்வரூபத்தைப் பரபக்ஷ நிராஸ பூர்வகமாக ஸ்தாபித்தான். ஆதலின், ஶரணாகதி ஸ்வரூபத்தை நன்ருக வெளியிடுவதற்காகவே ஸ்ரீமந்நிகமாந்த தேசிகாவதாரம் என்பது அறியத் தக்கது.

ஸ்வாமி தேசிகனுடைய க்ருஷ்ணநுபவம்

"கண்ணா நான்முகனைப் படைத்தானே காரணா கரியாய் அடியேன் நான்
உண்ணா நாள் பசியாவ தொன்றில்லை ஓவாதே நமோ நாரணா வென்று
எண்ணா நாளும் இருக்கேசுச் சாமவேத நாண் மலர் கொண்டுன பாதம்
நண்ணா நாளவை தத்துறுமாகி லன்றெனக் கவை பட்டினி நாளே."

என்று நான்கு வேதங்களாகிய மலர்களைக் கொண்டு பகவதர்ச்சநம் முதலிய அநுபவம் இல்லாத நாள் பட்டினி நாளாகக் கருதப்படுகிற படியால், பகவதநுபவத்துக்குள் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தின் பால்ய லீலாநுபவம் அஸாதாரணமா யிருப்பதால், ஸ்வாமிக்குள்ள அவ்வநுபவ முதிர்ச்சியைத் திங் மாத்ர ப்ரதர்ஶநம் பண்ணிக் கொள்கிறேன்.

"[illegible] ।
[illegible] ॥"

'என்ன நோன்பு நோற்ருள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்' என்று யாவராலும் புகழப்பட்ட தேவகீ தேவியாலும், 'மருவும்..........திருவிலேனென்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்ருளே' என்று புகழப்பட்ட பாக்யமுள்ள யசோதா தேவி, தளர் நடையை உடையவும் முழங்காலால் தவழ்வதில் ஆசையோடும் கூடிய தன் புதல்வனைத் தன் மடியில் வைத்து ஸ்தந்ய பாநம் செய்விக்கிருள் என்பதையும்,

"[illegible] ।
[illegible] ॥"

என்றும், "மத்துறுகடை வெண்ணெய் களவினி லுரவிடை யாப்புண்டு
எத்திற முரலினேெ டிணைந்திருந் தேங்கிய வெளிவே"

என்றும், பக்த பரவஶனய் உரலினேடு கட்டுப்பட்டதை த்யாநம் செய்பவர்களுக்கு அநாயாஸமாகவே கர்ம பந்தம் விடுபடுவதால், இவ்வுலகில் ஒருவன் பகவானை எவ்விதம் உபாஸநம் பண்ணுகிருனே அவ்விதமாகப் பரலோகத்திலும்

பலஸித்தி உண்டாகிறது என்று தெரிவிக்கும் ந்யாயம், தனது அதிகாரம் இவ் விஷயத்தில் செல்லாததினால் மிகவும் ஶோகத்தை அடைந்து ஒருவருக்கும் அகப் படாமல் காட்டில் வஸிக்க ஆரம்பித்துவிட்டது. [ப்ருஹதாரண்யத்தில் இருக் கிறது என்பது வேறொரு பொருள்.] என்று கண்ணன் உரலில் கட்டுண்டதையும் அழகாக அநுபவிக்கிறார்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

1

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

இந்த ஸபையின் அரை வருஷக் கொண்டாட்டம், 15—5—46 புதன்கிழமை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி மஹோத்ஸவ தினத்தன்று விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. அப்போது ராமாயணபூஷணம் கோமல் ஸ்ரீ. உப. சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமி ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ வைபவம்’ என்னும் விஷயத்தைப் பற்றி மிகவும் அழகான முறையில் உபந்யாஸம் செய்தருளினர். பின்னர் மதுரை அட்வொகெட் ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியினால் அனுப்பப்பட்டிருந்த ஸபா விஷயமான ஆசிச் செய்தியானது வாசிக்கப் பட்டது.

ஷை கொண்டாட்டமானது 500 பேர்கள் கொண்ட திரளான ஆஸ்திக மஹான் களுக்கு இடையில் இரவு 7-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, 6-மணி ஸாவகாசம் நடத்தப்பட் டது. கதையின் ஆரம்பத்திற்கு முன், இவ்வூர் ஓவியக்கலை வல்லுநரான பென்ஷனர் ஸ்ரீ. உப. T. A. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி, இந்த ஸபையின் முக்ய நோக்கங்களை யும், ஸபை செய்துவரும் கைங்கர்யங்களையும், ஸபைக்கு ஆஸ்திக மஹான்கள் செய்ய வேண்டிய விஷயங்களையும் பற்றி விரிவாக ஓர் உபந்யாஸம் செய்தருளினர். முடிவில், ஸபைக்கு வந்திருந்த ஆஸ்திக மஹான்கள் யாவர்க்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு, மங்கள பூர்வகம் ஸபை இனிது முடிந்தது.

15—5—46 புதன்கிழமை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி ப்ரயுக்தமாக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம் ஹன் விசேஷ திருமஞ்ஜனம் கண்டருளினர்.

R. நரஸிம்ஹாசார்யர்,
[கார்யதர்சி,]

2

ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.

மேலதிகாரிகளால் நடத்தப்பட்ட இவ்வர்ஷத்து ஏப்ரில் மாஸத்து ஶிரோமணி பூர்வ பாகப் பரீக்ஷைக்கு, ஷை பாடசாலையிலிருந்து வ்யாகரண சிரோமணி பூர்வ பாகத் துக்கு ஐந்து வித்யார்த்திகளும், ந்யாய ஶிரோமணி பூர்வ பாகத்துக்கு ஏழு வித்யார்த்தி களும் அனுப்பப்பட்டிருந்தார்கள். அப்பரீக்ஷையில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ர ஹத்தால், வ்யாகரண ஶிரோமணிப் பரீக்ஷையில் ஐவருக்கு ஐவரும் நிஷ்பத்தி பெற்றனர். அன்றியும் அவர்களுள் ஒருவர் முதல் வகுப்பிலும் (I Class) ஒருவர் இரண்டாம் வகுப் பிலும் (II Class) தேறினர். ந்யாய ஶிரோமணி பூர்வபாகப் பரீக்ஷைக்குச் சென்ற எழுவரில் அறுவர் வெற்றிபெற்றனர்.

தி. ராமஸ்வாமி M.A., L.T.,
(ஆனரெரி ப்ரின்ஸிபல்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽநிஶம் ப்ரவிஶ்ய மம வாங்மயம் ப்ரஸாத்ய
ஸஞ்ஜீவயத்யவிகலப்ரதிபாஸ் ஸ்வயந்ந: ।
ஆந்த்யாம்ஶ்ச ஹஸ்த்யகிரிஶ்ரவணாப்யுபாதீந்
ப்ராணானஹோ ஸ்வதமதே பரமாத்மஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

ஸ்ரீ அழகிய சிங்கருடைய ப்ரதம யாத்ரா மஹோத்ஸவம், இப்பொழுது ஒருவாறு முற்றுப் பெற்றதென்று சொல்லலாம். ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீரங்கத்தில் ஸித்தாந்த ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகிய சிங்கரின் காலத்தில், ஒரு ஸமயம் ஸ்ரீ விஶிஷ்டாத்வைத மதத்தை ஸர் முதல் யாத்ரோத் வத்ர பரவச் செய்யவேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, ஸவத்தின் முடிவு. ஸ்வாமி தமக்கு ஆப்தர்களாக இருந்த வித்வத் வர்க்கங்க ளுடனும் ஏராளமான பரிஜந பரிச்சதங்களுடனும் ஸ்ரீரங் கத்திலிருந்து யாத்ரையாகப் புறப்பட்டு, முதலில் கிழக்கிலும், பிறகு தக்ஷிண திக்கிலும், அதற்குப் பிறகு மேற்குத் தேசங்களிலும், அங்கிருந்து ஹிமாசல பர்யந்தமுள்ள மஹா புண்ய பூமிகளிலும் பூ ப்ரதக்ஷிணமாகத் திக் விஜயம் செய்துகொண்டு, மஹத்தான ப்ரக்யாதியுடன் திரும்பி ஸ்ரீரங்கம் எழுந்தருளின தாகப் பெரியோர்கள் சொல்லி அறிகிறேப். அதற்குத் துல்யமாக, ப்ரக்ருத ஸ்ரீ அழகிய சிங்கருடைய யாத்ரையும் அவ்விதமே அத்யத்புதமான பூர்த்தி பெறுமென்றும், காசி முதலான ப்ரக்யாத வித்யாஸ்தாநங்களில் வித்வான்க ளுடன் வாக்யார்த்த விசாரம் செய்து நமது ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து, அதன் பலமாக ஸ்ரீ ஹயக்ரீவனுடைய ப்ரஶம்ஸாவசநத்தைப் பெற்று, அத்விதீயமான விஜயத்துடன் திரும்பி எழுந்தருளும்படியாக இருக்குமென்றும் நாம் மநோரதத்தி திருந்தோம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், உத்தரதேச யாத்ரைக்கு இக்காலம் அநு கூலமாக இல்லையென்னும் காரணத்தால் ஸ்ரீ அழகிய சிங்கரை ஹைதராபாத் எழுந்தருளினவுடன் ப்ரதிநிவர்த்திக்கும்படி ஸங்கல்பித்து விட்டான். இதுவும் நமது ஆநுகூல்யத்தின் பொருட்டேயென்று நாம் ஆச்வாஸத்தை அடைகின் றோம். சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் விண்ணப்பித்துக் கொண்டிருந்தபடி, ஸ்ரீ அழகிய சிங்கர் திருமலையிலும் கீழைத் திருப்பதியிலும் ஸ்ரீ திருவேங்கட முடையான் ஸ்ரீ கோவிந்தராஜன் முதலிய எம்பெருமான்களை மங்களாஶாஸநம் செய்துகொண்டு, இப்பொழுது திருவெவ்வுளூருக்கு எழுந்தருளியிருக்கிறார். வரப் போகும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் ஸ்ரீ திருவெவ்வுளூரில் நடைபெறலா மென்று நினைக்கிறோம்.

*   *   *   *   *   *

இரண்டு மாஸங்களுக்கு முன், நாம், சேலத்தில் திவான் பஹதூர் ஸ்ரீ. ஆர். வி. க்ருஷ்ணயருடைய முயற்சியின் பேரில் நடைபெற்ற ப்ராம்ஹண மஹா ஸபையைப் பற்றி நம்முடைய அபிப்ராயத்தை ஒருவாறு வெளியிட்டிருந்தோம். சேலத்தில் அந்த ஸபை நடைபெற்ற பிறகு, அந்த ஸபையின் ஸம்பந்தமாக வேறு பல இடங்களில் ப்ராம்ஹண ஸங்கங்கள் நடைபெற்று வருகின்றன.

ப்ராம்ஹண மஹாஸபை

ஸமீபித்த காலத்தில் சென்னையிலும் நாலைந்து இடங்களில் ஸங்கங்கள் நடைபெற்றன. இதன் அபிவ்ருத்தியைச் சிலர், மஹத்தான உத்ஸாஹத்துடன் ஆஶம்ஸிக்கிறார்கள். நமக்கும் அம்மாதிரியான ஆஶம்ஸை உண்டு. ஆனால் ஒரு அதிஶங்கை மாத்ரம் நம்முடைய மனஸ்ஸில் உதிக்கின்றது. பெரியதொரு ஆநுகூல்யத்தை உத்தேசித்து நம்மால் செய்யப்படும் சில ப்ரயத்நங்கள், சில ஸமயங்களில், நம்மால் எதிர்பார்க்கப்படாமல் அனர்த்தத்தில் பர்யவஸிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அம்மாதிரியான அனர்த்தம் ஏதேனும் இந்த ப்ரயத்நத்தால் நேர்ந்து விடுமோ என்பதே நமது பீதி.

இரண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன், அப்ராம்ஹணர்கள் சிலர், சிற்சில விடங்களில் சில ஸங்கங்களை அமைத்துக்கொண்டு, அவைகளில் ப்ராம்ஹணர்களை நிஷ்காரணமாகத் திட்டுவதிலும், அவர்கள்மீது அபூதமான அவதூறுகளைப் பேசுவதிலும் ப்ரவர்த்தித்தார்கள் என்பது எல்லாருக்கும் ஜ்ஞாபகத்தில் இருக்கலாம். கொஞ்ச காலம் இந்த முயற்சி கொந்தளித்து விட்டு, பிறகு அது தானாகவே ஶமனத்தை அடைந்தது. இப்பொழுது இரண்டொரு மாஸ காலமாக அது மறுபடியும் ஒருவித உத்வேகத்தை அடைந்து தீவ்ரமாகப் பரவி வருவதை நாம் பார்க்கிறோம். இந்தக் கிளர்ச்சிக்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவைகளுள் நமது ப்ராம்ஹண ஸபையும் ஒரு காரணமாக இருக்குமோ வென்பது நமது ஶங்கை. வீர்ய மற்றவர்க ளென்று நம்மை உதாஸித்து வந்த அப்ராம்ஹணர்கள், நாம் ஸ்வல்ப வீர்யத்தை அவலம்பித்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் ஸ்வல்ப முயற்சி செய்வதைப் பார்த்து ஆக்ரஹம் கொண்டவர்களாய், நம்மை மறுபடியும் தாக்குவதற்கு ஆரம்பிக்கிறார்களோ வென்று நாம் ஸந்தேஹிக்கிறோம்.

இம்மாதிரியான கிளர்ச்சிகள் இந்த லோகத்தில் ஸம்பவிப்பதுண்டு. இதைப் பர்யாலோசிக்கும்போது, 'நாம் வீர்ய மற்றவர்கள் போலவே நிருத்யோகர்களாக இருப்பதே உசிதமாக இருக்கமாட்டாதோ?' என்று ஓர் எண்ணம் தோன்றுகிறது. அவர்களை எதிர்த்து நிற்க ஶக்தி பூர்ணமாக இருக்கும் பக்ஷத்தில் "வஹாகூ-ஜஊஷ்வ உசெஹ ஸொஅ்தெ" என்று சிறிய திருவடி நிர்ணயித்ததுபோல் நாமும் நிர்ணயிக்கலாம். அது ஸாத்யமில்லை யென்று தோன்றினால், நாம் "யஹ்ராவி தஹ்ரவத-ஃ" என்று விலகி நிற்பதே புத்திமத்க்ருத்ய மாகாதோ?.

இது நிற்க: 'ப்ராம்ஹண ஸபை' என்னும் பெயருடன் வழங்கும் ஸபை, ப்ராம்ஹண்யத்துக்கு அத்யவச்யமாயுள்ள தர்மங்களை, முக்யமான அம்ஶங்களிலாவது, ஆதரித்துவர வேண்டாமா? சிறுவர்களுக்கு த்ரவ்ய ஸம்பாதநத்துக்கு அபேக்ஷிதமான யோக்யதையை ஏற்படுத்துவது முக்யமே யாயினும், அதை ப்ரதான ப்ராஹ்மண தர்மங்களுக்கு விரோத மின்றிக்கே உண்டுபண்ணிக் கொடுப்பதன்றோ ப்ராஹ்மண ஸபைக்கு லக்ஷணமாகும்? இந்த ஸபையின் நிர்வாஹகர்கள் நமது சிறுவர்களைத் தேசாந்தரங்களுக்கு அனுப்பி, அங்குள்ள ஶில்ப ஜ்ஞானம் பௌதிக ஶாஸ்த்ர ஜ்ஞானம் இவை முதலியவற்றை ஸம்பாதித்து வரும்படி செய்வதற்கு முயற்சிக்கிறார்களாம். இது, நமது ப்ராம்ஹண தர்மத்தை ஸம்ரக்ஷித்து வருவதாகுமா? தேசாந்தரத்துக்கு நமது சிறுவர்கள்

போனால் அவர்களுடைய நித்ய கர்மங்கள் சரிவரச் செய்யப்பட்டு வருமா? ஸந்த்யாவந்தநம் ச்ராத்தம் முதலானவைகளுக்கு லோபம் வரமாட்டாதோ? அவர்களுக்கு ஆஹாரமும் எவ்விதத்தில் கட்டுக்கு உட்பட்டு நிற்கும்? இவைகளை அநாதரித்துவிட்டால், ஜாதிதர்மத்தையே ஒழித்துவிட வேண்டுமென்று வாதித்துவரும் நமது ஆதுநிக நாஸ்திகர்களுக்கும் நமக்கும் வாசி என்ன? இந்த விஷயங்களையும் ஸபையின் நிர்வாஹகர்கள் கவனிப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

*　　*　　*　　*

காலத்தின் கொடுமை

“ஶிலம் கிமநலம் ப⁴வேத³நலமௌத³ரம் பா³தி⁴தும்” என்று ஸ்ரீ தேசிகன் வைராக்ய பஞ்சகத்தில் அநுக்ரஹித்திருப்பதை எல்லாரும் அறியலாம். இந்த ச்லோகத்தால், ‘உண்ணும் சோற்றுக்குப் பஞ்சம் வந்து அதனால் ஜநங்கள் மடிந்தார்கள் என்பது ஒருபோதும் ஸம்பவியாது; ஸ்வாதுவான பதார்த்தம் அகப்படாமல் போகலாம்; ஸ்வாதுத் தன்மையை எதிர்பாராமல், அதில் விரக்தனாயிருக்கும் ஒருவனுக்குத் தேஹதாரணத்துக்கு அபேக்ஷிதமான ஆஹாரம் ஒருபோதும் அகப்படாமற் போகாது’ என்பதுதான் ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளம். ஸ்ரீ தேசிகன் எழுந்தருளியிருந்த காலம், தர்மம் மேலிட்டிருந்த காலம்; அக்காலத்தில் வயல்களிலும் வரப்புகளிலும் தாந்யங்கள் ஏராளமாக உதிர்ந்து கிடப்பதுண்டு; விரக்தர்கள் அவைகளைச் சேகரித்துத் தேஹதாரணத்தைச் செய்து கொள்வார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட தாந்யங்கள் துர்லபமாகிவிட்டன; அன்றியும் அவ்வளவு வைராக்ய முடையவர்களும் இக்காலத்தில் எவருமில்லை. தவிர, அப்பொழுதைக்கு இப்பொழுது ஜநத் தொகையும் அதிகரித்துவிட்டது. நாம் எதிர்பாராத அயல் நாட்டு ஜநங்களும் ஏராளமாக நமது தேசத்தில் ப்ரவேசித்து விட்டார்கள். ஆகையால் உணவுப் பொருள்கள் அருமையாகி நம்மை உக்ரமாக இப்பொழுது வருத்துகின்றன.

இப்பொழுது இந்தத் தேசத்தில் லப்யமாக இருக்கும் உணவுப் பொருள்களை ராஜாங்கத்து அதிகாரிகள் கணக்கிட்டுப் பார்த்து, அப்பொருள்கள் பரமாவதி இன்னும் மூன்று மாஸ காலத்திற்கே போதுமானவையாக இருக்குமென்றும், அதற்குப் பிறகு புதிய உணவுப் பொருள்கள் உத்பத்தியாகும் பர்யந்தம் பெருத்த பஞ்சமே நேருமென்றும் சொல்லுகிறார்கள். இப்பொழுது கைவசமிருக்கும் பொருள்களைச் செட்டும் சீருமாக உபயோகப்படுத்தி வருவது அவச்யமென்று மஹாஜனங்களுக்கு அவர்கள் உபதேசம் செய்தும் வருகிறார்கள். புதிய தாந்யங்கள் உத்பத்தியான பிறகும், அவை போதுமான அளவு உத்பந்நங்களாகுமா வென்பதும் ஸங்காஸ்பதமாக இருக்கிறதாம். ஆவணி புரட்டாசி மாஸங்களில் பெரிய பஞ்சமொன்று ஸம்பவிக்கலா மென்று பயப்பட இடமிருக்கின்றதாம். இதை உத்தேசித்துச் சிலர் காய் கிழங்குகளைச் சேகரித்து அவைகளை உலர்த்தி வற்றல்களாக ஸம்ரக்ஷித்து வருகிறார்களாம். மற்றும் சிலர் இப்பொழுது முதல், மித போஜநத்தைப் பழக்கப்படுத்தி வருகிறார்களாம். எவர்

கள் எவ்விதம் வர்த்தித்து வந்தாலும், ராஜாங்கத்தாரால் ஶங்கிக்கப்படும் பஞ்சம் நேரும் பக்ஷத்தில் நாம் மிகவும் துயரப்படுவோ மென்பதில் ஆக்ஷேபமில்லை.

நிற்க : இப்பொழுது நம்மைப் பரிபாலித்துவரும் பாச்சாத்ய ராஜாங்கத்தார், தமது ராஜ்ய நிர்வாஹ பாரத்தை நமது மஹா ஜனங்களிடம் ஒப்புவிக்கப் போகிறார்களாம். நிர்வஹிக்கும் அதிகாரங்களை மஹா ஜநங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதில் பிந்ந பிந்ந ஜாதியர்களுக்குள் பரஸ்பரம் சிற்சில தாரதம்யங்கள் ஏற்படும்போல் தெரிகின்றது. இதைப் பார்த்துச் சில ஜாதீயர்கள் வருந்துகிறார்கள். இயற்கையாக ராக த்வேஷாதிகளுக்குப் பரவஶராயிருக்கும் ஜநங்களுக்குள் பரஸ்பரம் அஸூயையையும் ஜநிக்கும் பக்ஷத்தில், அவர்களிடம் ப்ரஜா பரிபாலந தர்மம் ஒப்புவிக்கப்பட்டால், அவர்கள் எவ்விதத்தில் அந்தத் தர்மத்தை நிஷ்பக்ஷபாதமாகவும் ந்யாயத்துக்கு ஒத்ததாகவும் நடத்தி வருவார்க ளென்பது நமக்குப் புலப்படவில்லை. இப்பொழுதே தேசமெங்கும் கட்டுக் குலைந்ததாகத் தெரிகின்றது. தொழிலாளிகளுக்குள் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டு வருவதையும், ராஜ்ய பரிபாலநத்தைச் சரிவர நடத்த வொட்டாமல் ஜநங்கள் முரட்டுத்தனமாக எதிர்த்து நிற்பதையும் பல விடங்களில் பார்க்கிறோம். இந்தத் துர்த்தஶையின் நடுவில் அகப்பட்டுள்ள ஸாது ஜநங்களின் கதி என்ன ஆகுமோ தெரியவில்லை.

*　　*　　*　　*　　*　　*

வேதாந்தவிஷயமாக ஒரு ஸந்தேஹம்.

'அர்ச்சிராதி கதி' என்று மோக்ஷமார்க்க மொன்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. "அநாதிகாலம் அநுசித புருஷார்த்த ஸங்கத்தால் ஸம்ஸார பதவியில் ஓடின விடாயெல்லாம் தீர வத்ஸலனான ஹார்த்தன் தனது பக்தனை 'அர்ச்சிஸ், அஹஸ், பூர்வ பக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரம், வாயு, ஆதித்யன், சந்த்ரன், வைத்யுதன், இவனுக்கு ஸஹகாரிகளான வருண இந்த்ர ப்ரஜாபதிகள்' என்று இவ்வாறு சொல்லப்படுகிற முதலிகளை யிட்டு ஸ்ரீ வைகுண்டத்துக்கு வழிப்படுத்துகிறான்" என்று ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லக் கேட்கிறோம். இந்த மார்க்கத்தைத் தவிர வேறு மோக்ஷ மார்க்கங்களு முண்டு என்று சில ஶாஸ்த்ராந்தரங்கள் சொல்லுகின்றன. மஹா பாரதத்தில் விபவ வ்யூஹ லோகம் வழியாகச் சிலர் மோக்ஷத்தை அடைந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சிசுபாலன் இங்கேயே ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவடிகளில் லயித்து முக்தி யடைந்தானும். அயோத்யா வாஸிகள் ஸாந்தாநிக லோகம் போய், அங்கிருந்தே மோக்ஷம் பெற்றார்கள். ஆனால் இந்த மார்க்காந்தரங்க ளெல்லாம் சில அதிகாரி விஶேஷங்களைப் பற்றியவை யென்றும், முமுக்ஷு ஸாமாந்யத்திற்கு அர்ச்சிராதி மார்க்கமே மோக்ஷமார்க்க மென்றும், ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். மோக்ஷம் பெற்றவர்களுக்குப் பின்பொரு காலத்திலும் ஸம்ஸார ப்ராப்தி இல்லை யென்றும் சொல்லுகிறார்கள். இதனை,

"வாயினால் நமோ நாரணா வென்று
மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப்

போயினல்பின்னை யித்திசைக் கென்றும்
பிணைக்கொடுக்கிலும் போக வொட்டாரே."

என்று ஆழ்வார்கள் அருளிச் செயலினல் அறியலாம். "இந்த அநாவ்ருத்தி யானது அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்றவர்களுக்கு மாத்ரமா? அல்லது வேறு வழியால் சென்றவர்களுக்குக் கூடவா?" என்பதுதான் ப்ரஸ்துத ஸந்தேஹம்.

இவ்விதம் ஸந்தேஹம் வருவதற்குக் காரணமென்ன வென்று கேட்க லாம். ஸ்வாமி தேசிகன் பரமபத ஸோபாநத்தில் அர்ச்சிராதி பர்வாவில் அபுநரா வ்ருத்தியைப்பற்றி ப்ரஸ்தாவிக்கு மிடத்தில், "வைகுண்டத்தை அடைந்திருந்த வைதிகன் புத்ரர்களை ஸ்ரீ க்ருஷ்ணன் மீட்டு, அவர்களுடைய பிதாவாகிய வைதிக னிடம் சேர்த்தார் என்பது இதற்கு விருத்தமன்றோ?" என்று ஒரு ஶங்கை யைச் செய்துகொண்டு, அதற்கு ஸமாதாநமாக, "வைதிகன் புத்ராதிகள் இவ்வர்ச்சிராதி கதியாலே தேஶவிஶேஷ ப்ராப்தி பெற்றவர்க ளல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்தமன்று" என்று அநுக்ரஹித்திருக்கிறார். இதி லிருந்து, 'அர்ச்சிராதி கதியா லல்லாமல் வேறு வழியாக வைகுண்டம் சேர்ந்த வர்களுக்குப் புநராவ்ருத்தி ஸம்பவிக்கலாம்' என்பது ஸ்ரீ தேசிகனுடைய திரு வுள்ளமாகத் தோன்றுகின்ற தன்றோ? வைதிகனுடைய புத்ரர்கள் கர்மத்தி லிருந்து நிவ்ருத்தி பெறுமலே, சேதந வர்க்கங்கள் ப்ரளய காலத்திற்போல ப்ரஹ்மத்தை அடைந்திருந்தார்க ளென்று சொல்வதும் அநுபபந்நம். ஏனெனில்: ப்ரளய காலத்தில் சேதநவர்க்கம் ப்ரஹ்மத்தினிடம் போகின்றன வென்பதற்கு ப்ரமாண வாக்யங்கள் உண்டு. கர்ம நிவ்ருத்தி எற்படாமல் வைகுண்டம் போவதற்கு ப்ரமாணமில்லை. அப்படி ப்ரமாண மிருந்தால் ஸ்ரீ தேசிகன் ஶங்கித விரோதத்திற்கு அதைக் காரணமாகச் சொல்லாமல் வேறுகாரணத்தைச் சொல்வது ஏன்? நிற்க, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில், பரிபூர்ண ப்ரஹ்மாநுப வாதிகாரத்தில், "இந்தக் கதிவிஶேஷத்தாலே சென்றவனுடைய பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் இருக்கும்படி எங்ஙனே யென்னில்" என்று ஆரம்பித்து, "ஸர்வேச்வரனை ஒன்றுங் குறையாமல் விஷயீகரித்துக் கொண்டிருக்கும்" என்று முடித்து, பிறகு "இவ்வநுபவ முண்டானல் பின்பொரு காலத்திலும் அது அழியாது" என்று அநுக்ரஹித்திருக்கிறார். இதன் உக்தி பங்கியைப் பார்க்கும்பொழுது 'இவ்வநுபவம்' என்னும் பதத்திற்கு, 'அர்ச்சிராதி கதியால் கிடைக்கும் இந்த அநுபவம்' என்று பொருள் கொள்வதே உசித மென்று சொல்ல வேண்டாவோ? இவை எல்லாவற்றையும் பரிஶீலித்துப் பார்த்தால் ஒருகால் ஸ்ரீ தேசிகன், 'அர்ச்சிராதி மார்க்கமாக வைகுண்டம் சென்றவர்க்கே அபுநராவ்ருத்தி உண்டு; வைதிகன் புத்ரர்கள்போல அர்ச்சிராதி மார்க்க மின் றிக்கே மார்க்காந்தரங்களில் வைகுண்டம் சென்றவர்களுக்கு புநரா வ்ருத்தி ஸம்பவிக்கலாம்' என்று திருவுள்ளம்பற்றி யிருக்கலாமோ வென்று ஒரு ஸந்தே ஹம் ஜநிக்கின்றது. இதன் ஸமாதாநத்தைத் தத்வ வித்துக்கள் யதா ப்ரமாணம் விவரிக்கவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

189222

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-மே மீ த்திய சந்தா வஸூல்

				ரூ.	அ.
34	ஸ்ரீ	A. ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஸ்ரீரங்கம்	....	3	0
82	,,	N. K. ஸ்ரீநிவாஸையங்கார், கிண்டி	....	3	0
101	,,	K. R. ஸ்ரீநிவாஸ ராகவன், மேல் மாம்பலம்	....	3	0
169	,,	C. M. வேங்கடராகவாசார்யர், ஹைதராபாத்	....	3	0
175	,,	B. K. குப்புஸாமி ஐயங்கார், குத்தி	....	1	0
221	,,	R. வேங்கடேசையங்கார், ஊட்டி	....	3	0
246	,,	M. S. விஜயராகவாசார்யர், சோகத்தூர்	....	2	0
367	,,	ஆயனம். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுராந்தகம்		2	0
464	,,	A. வெங்கடாசாரியார், கல்கத்தா	....	3	0
533	,,	V. ஸ்ரீரங்காசார்யர், பாதூர்	....	2	4
543	,,	K. சாரங்கபாணி ஐயங்கார், திருவெண்ணெய்நல்லூர்		2	0
552	,,	K. R. நரஸிம்ஹராகவன், சேலம்	....	3	0
665	,,	மட்டப்ப கௌண்டர், பாரியப்பள்ளி கிராமம்	....	3	0
674	,,	S. R. ஐயர், நாமக்கல்	....	3	0
683	,,	R. கமலம்மாள், தாமல்	...	3	0
684	,,	B. ரங்கஸாமி அய்யங்கார், காஞ்சீபுரம்	....	3	0
727	,,	T. N. தாதாசார்யர், பெங்களூர் ஸிடி	...	5	0
728	,,	K. ராமஸ்வாமி ஐயங்கார், மல்லேச்வரம்	....	3	0
731	,,	G. க்ருஷ்ணன், பம்பாய்	....	3	0

ஸ்ரீ :

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம் தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிற படியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

Regd. No. M. 4437.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 AUG 1946
MADRAS

லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீ கோசங்கள்.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1. ஸ்ரீ மாநமேய ரஹஸ்ய ச்லோக வார்த்திகம் [illegible] [தேவநாகரீ]	5—0	6—0
2. தர்சநோதயம் [illegible] S. [illegible] [தேவநாகரீ]	4—0	5—0
3. ப்ரபத்தி சாஸ்த்ரம் [illegible] [தெலுங்கு லிபி]	1—8	2—0
4. மீமாம்ஸா பாஷ்ய பூஷணம் [illegible] [தேவநாகரீ]	1—0	1—8
5. ஸ்ரீமத் சுகபாஷ்யம் [illegible] [தெலுங்குலிபி]	3—0	4—0

இவை கிடைக்கு மிடம்:— [தபால் சார்ஜ் ப்ரத்யேகம்]

ஸ்ரீ. K. S. வரதராஜ ஐயங்கார்,
துளஸி தோட்டம், பெங்களூர் ஸிடி.

[மேல் விலாஸம் இங்க்லீஷில் எழுதப்படவேண்டும்.]

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.